உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௨௮] சுக்கில-ஹு மார்கழிமீ [பகுதி-௨.

Vol. XXVIII. December-1929. January-1930. No. 2.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௪-ம் பக்கத்தொடர்ச்சி.]

### சடாயு உயிர்நீத்தபடலம்.

சடாயு உயிர்விட்டதைக் கூறுவது. "இவர், இராவணனோடு எதிர்த்துச் செய்யும் போரில் அடிபட்டு இறகொடிந்து வீழ்ந்தவுடனே இறந்திடாமல், இராமலக்குமணர்க்குச் செய்தியை அறிவித்தபின்னரே இறக்கக்கருதிச் சிறிதுபொழுது அரிதின் உயிர்தாங்கியிருந்து, அச்செய்தியை அவர்கட்குக் கூறியபின்னரே உயிரைவிடுதலால், இப்பகுதிக்குச் 'சடாயுவுயிர்நீத்த படலம்' என்று பெயரிட்டார். விராதன் வதைப்படலம், சரபங்கர் பிறப்புநீங்குபடலம், கரன்வதைப்படலம், மாரீசன் வதைப்படலம், சடாயுவுயிர்நீத்தப்படலம், சவரி பிறப்புநீங்கு படலம் என இவ்வாறு நூலாசிரியர் படலங்களுக்குத்தக்கவாறு பெயர் நாட்டும் நயம் நன்குமதிக்கற்பாற்று."

இறக்கும் மாரீசன் இராமன்குரலாற் கதறியதைக் கேட்ட
சீதை துக்கித்து இலக்ஷ்மணனை ஏன் இராமனுக்கு
உதவிபுரிய ஓடாமல் நிற்கின்றாயெனல்.

[மாயமானான மாரீசன் இறக்கும்போது இராமன்குரலாற் கதறியதைச் செவியுற்ற சீதை, அக்குரல் இராமனுடையதேயென்று எண்ணி, அவன் அபாயம் அடைந்தானென்று பூமியில் விழுந்து புரண்டு, பாவியேன், இம்மானைப் பிடித்துத்தா என்று என்வாழ்வை முடித்து

விட்டேன் என்று அலறியழுதாள். இறந்தது இராக்கதனேயென்று தெரிந்ததனால் வருந்துதலேயில்லாமல் வாளாநின்ற இலக்குமணனை நோக்கி "எங்கோமான் அபாயமுற்றானென்றறிந்தும் உதவிசெய்ய ஓடாமல் நிற்கின்றாயே" என்று கோபித்துக்கூறினாள்.

### இலக்குமணன் சீதைக்குத் தேறுதல் கூறுதல்.

"இராமன்பெருமையை நீ பெண்தன்மையால் அறிந்தாயில்லை. அவன் ஆரென்றறியாமல் அல்லலுறுகின்றாய். எல்லா உலகங்களுக்கும் இறைவனே அவன். அவனுக்கு அபாயம் ஒருகாலும் அணுகாது. அணுகியிருந்தால் அகில உலகமும் அழிந்திருக்கும் அவனுடைய அம்புபட்டு இறக்கும் அரக்கன் மரிக்கும்போது ஆற்றியவஞ்சகக் குரலே நாம் கேட்டது. அஞ்சாதிருப்பாயாக" என்று இலக்குமணன் இயம்பினான்.

### சீதை சேத்துவிடுவேனென, இலக்குமணன் இராமனிடம் ஏகுதல்.

சீதை சிறிதும் தேறாளாய்த் திரும்பவும் சினந்து "எங்கோனோடு ஒருநாட் பழகினோரும் அவனுக்காக உயிரைக் கொடுப்பார்கள். நீ அவன் ஆபத்தடைந்து அலறியதைக்கேட்டும் மனங்கலங்காமல் வாளா நிற்கின்றாய்! அதோ! எரிகின்ற காட்டுத்தீயிலே விழுந்து இறந்துவிடுவேன்." என்று கூறிச் செந்தாமரை நிறையப்பூத்த தெண்ணீர்த் தடாகத்துக்குச் செல்லும் அன்னம்போல, அத்தீயிலே பாயப் புறப்பட்டாள். அப்போது, "நீ இறப்பானேன்! நீ சொல்லியபடியே செல்லுவதனால் உனக்கு அபாயம் நேருமென் றஞ்சினேனன்றி, உன் கட்டளையைக் கடக்கக் கருதினேனல்லேன். இதோ! ஏகுகின்றேன். இது விதியின்செயல்; அதனை வெல்லவல்லேமல்லேம். நீ தனிமையுறுகின்றாய் ஆபத்து நேரப்போகின்றது." என்று சொல்லிவிட்டு இலக்குமணன் சென்றான். 'யான் இங்கே யிருந்தால் இவள் இறந்துவிடுவாள். ஏகினால் இவளுக்கு இடையூறு எய்தும். இந்தத் தருமசங்கடத்தினின்று தப்புதற்கு ஒரேவழி யுள்ளது. அது உயிரைவிடுதலே. இவள் ஆவி அழியவில்லையானால், தீது நேர்ந்தாலும் தீர்க்கலாம். அதற்கு யான் உயிர்விடாதிருந்தால் உதவுவேனாகலாம். ஆதலால், இவள் இறக்கவிருந்தாலும் இருக்கவிட்டு யான் இறவாது

வகுதலே ஏற்றதாம். ஒருகால் தீங்குநேர்ந்தால், சடாயு கண்டு காத்துக்கொள்வான்' என்று சிந்தித்துத் தேறுதலுற்று இலக்குமணன் இராமனிடம் ஏகினான்.]

## இராவணன், சந்நியாசி வேடங்கொண்டு, சீதையைக்கண்டு அவள் அழகில் ஈடுபடல்.

415. பூப்பொதி அவிழ்ந்தன நடையன்; பூதலம்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்;
காப்பரும் நடுக்குறுங் காலன், கையினன்;
மூப்பெனும் பருவமும் முனிய முற்றினான்.

இ - ள். [சீதை தனிமைப்படுஞ் சமயம்பார்த்திருந்தவனான இராவணன், விருத்த சந்நியாசி வேடங்கொண்டு, உணவில்லாமல் உலர்ந்து வற்றிய உடலும் நெடுந்தூரம் கடந்திளைத்த வருத்தமும் உடையவனாய்] அரும்பு (பூவாக அவிழுந் தருணத்தில் மெல்ல) விரி (தலால் இடம் பெயர்)ந்தாற்போன்ற (தாமத) நடையுடையவனாய்த் தரை, நெருப்பினால் மூடப்பட்டதாமென்று (நினைப்போர் அதன்மேல் அஞ்சி மிதித்தல் போலக் கால் அழுந்தாமல்) மிதிப்பவனாய்த் தடுக்கமுடியாத நடுக்க முடைய (தலை;) கால் கையுடையவனாய், (மூப்படைந்த தன்னைக் கண்டோர் வெறுப்பதல்லாமல், அந்த) மூப்புப் பருவமே வெறுக்கும்படி (மிகவும்) முதிர்ந்தவனாய் [ச் சீதையிருந்த பர்ணசாலையருகே சென்றான்.]

பொதி - அரும்பு. காத்தல் - தடுத்தல். முனிதல் - வெறுத்தல். முற்றுதல் - முதிர்தல்.

இதற்கு முந்தியபாட்டில் 'ஊனிலனாமென உலர்ந்த மேனியன்' என்றது தணிகைப்புராணம் களவுப்படலத்தில் (கஉஎ-ம் பாட்டில்) வாயால் ஊதும் சிறுகாற்றையுந்தாங்கி நிலைநிற்கமாட்டாது சருகுதிர்ந்து வீழ்தல்போல வீழ்ந்துவிடும்படி மெலிந்து வெகு லகுவான மேனியுடையானென்று பொருள்படும் 'ஊத உகுவான்' என்ற பொருள் பொதிந்த சொற்றொடரை நினைப்பூட்டுகின்றது. இந்தப் 'பூப்பொதி அவிழ்ந்தன' என்ற பாட்டின் முதல் மூன்றடியும், ஷை புராணம் ஷை படலத்தில் (கஉ௯-ம் பாட்டில்) "கைத்தசை கவுட்டசை கழற்றசைகள் தூங்க - மெத்திய சழங்கலுடை வீழ்த்துநடை தப்பத் - தத்தடி யிடுவ

கழல் தளர்ந்து தடுமாற - ஒத்தகா ளுேடுதலை யுந்தலை குலைப்ப" என வருவதனுடன் (கஉ௩ ம் பாட்டில்) "மேதினி அளப்பவரின் மென்மேல நடந்து" என வருவதையும், 'மூப்பெனும் பருவமும் முனிய மூற்றினன்' என்ற இறுதியடி, இந்நூல் வேள்விப்படலத்தில் (௩௫ ம் பாட்டில்) 'பயந்தவர்களும் இகழ் குறளன்' என வருவதையும் நினைவுறுத்து கின்றன.

[இராவணசந்நியாசி பர்ணசாலைவாயிலிற் சென்று நின்று "இங்கே யிருக்கின்றவர் யார்" எனச் சீதை அவனை உண்மைச் சந்நியாசி யென்றுன்னி 'உள்ளே வருக' என்றுரைத்துக்கொண்டு எதிரேவரக் கண்டு அவன் அகத்தினுள்ளே ஆசைக்கடல் ஆர்த்தெழுந்து அலை மோதிப் பொங்கிப் புரண்டு பெருகாநிற்கத் தேவமாத ரழகினுஞ்சிறந்து துக்கநிலையினும் சொலிக்கும் அவள் அழகை நோக்கித் தீவிய தேனை விரும்பி அருந்தும் ஈக்களின்கூட்டம்போல இருபது கண்களின் ஈட்டம் களிக்க இதயங் களித்து, இவள் எழிலை இனிது காணுதற்கு எனக்கு இமையாத கண்கள் எண்ணிறந்தன இல்லை, இமைக்குங் கண்கள் இருபதே இருக்கின்றனவென்றும், இவள் இன்பக்கடலில் இனிது ஆடித் திளைத்தற்கு யான பெருந்தவம் புரிந்து பெற்றுள்ள மூன்றரைக் கோடி ஆயுள் முழுவதுமே போதாது என்றும் எண்ணினன்.]

416. உளைவுறு துயர்முகத் தொளிஇ தாமெனின்,
முளைஎயி றிலங்கிடும் முறுவல் என்படும்!
தளை அவிழ் குழல்இவட் கண்டு தந்தஎன்
இளையவட் களிப்பன்என் அரசென் றெண்ணினன்.

இ - ள். (இவளது) துக்கமுகப்பொலிவே இப்படிப்பட்ட (இனிமைவாய்ந்த) தென்றால், (சிறிது வெளிப்பட்டுத்) தோன்றும் (வெண்) பல் விளக்கும் புன்னகை (பொருந்திய சந்தோஷ முகப்பொலிவு) என்ன (இனிமையுடைய) தாயிருக்கும்! இவளை (நாடி) க் கண்டு (பிடித்துக் காட்டிக்) கொடுத்த (என்) தங்கைக்கு என் இராச்சியத்தை ஈவே னென் றெண்ணினன்.

உளைவு - மனவருத்தம். உறு - உற்ற; மிக்க. முளைத்தல் - வெளிப் பட்டுத்தோன்றல். (தமிழ்ச்சொல்லகராதி). எயிறு-பல். முறுவல்—சிரிப்பு.

தளை அவிழ் குழல் - (சூட்டியிருக்கிற பூமாலையினது) மலர் தருணத் தரும்புகளின் இதழ்கள்) கட்டு (உண்டாற்போல ஒன்றோடொன்று இறுகப் பொருந்தியிருந்தமை நீங்கிப் பிரிந்து விரிந்து) அவிழ்ந்த கூந்தல். "இராமனுக்கு வருத்தம் நேர்ந்ததாக அறிந்ததனாலாகிய சோகத்தால், சீதை, குழல்சோர நின்றனளென்பதுபடத் 'தளை அவிழ்குழல்' என்றதாகவுங் கொள்ளலாம்".

முன்னிரண் டடிக்கருத்தும் பின்னிரண் டடிக்கருத்தும் ஆகிய இருவகைக் கருத்துக்களும் அருமையினுமருமையாய் இனிமையினுமினிமையாய் அமைந்திருத்தல் நுணுகி நோக்கி நுகரத்தக்கது.

### சீதா ராவண சம்வாதம்.*

[சீதை கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "இங்கே வருக, இந்த இருக்கையில் எழுந்தருள்க" என, இராவணன் இருந்தான். இருந்த போது, அவனைக் கண்டு அஞ்சி மலைகளும் மரங்களும் நடுங்கின, பறவைகளும் மிருகங்களும் தூலடங்கின, பாம்புகள் படங்களொடுங்கிப் பதுங்கி யொதுங்கின † அவன், "இங்கே வசிக்கும் முனிவன் யார்? நீர் யார்?" என, அவள், "தசரத சக்கரவர்த்தி தநயன், தாய் சொல்லைத் தலைமேற்கொண்டு தவவேடம் தாங்கி இங்கே தங்கியிருக்கின்றான். அவன் பெயரை அறிவீர் ‡ என்றாள். அவன் "நீர் யார் மகள்?" எனச்

---

* சம்வாதம் ஒருவரோடொருவர் தர்க்கித்து உரையாடல்.

† இராவணன் சீதையைக் கவரும் தீவினை நிகழ்தற்கு முன் உற்பாதமாக இந்தச் சுபாவாதீத சம்பவங்கள் நிகழ்ந்தனவாகக் கவிச்சக்கரவர்த்தி கூறியது, விவிலியநூல் கூறும் ஆதிமக்கள் முதற்கட் பாவஞ்செய்தபின் உற்பாதமாக நிகழ்ந்தனவாக மில்டன் (Milton) மஹாகவி கூறியிருப்பவைகளை ஞாபகமுறச் செய்கின்றது. அவை வருமாறு:—'அதை (ஆதிமாது கடவுளால் விலக்கப் பட்ட மாத்துக் கனியைத் தின்று பாவஞ்செய்ததை)ப் பூமி வெட்டுண்டது போல அறிந்தது. இயற்கை (பிரகிருதி) பெருமூச்செறிந்து வியாகுல சின்னங்களை வெளியிட்டது (சுவர்க்கநீக்கம் ௯௬-ம் பக்கம்). (அக்கனியை ஆதிமனிதனும்) அருந்தவே, பூமி விசனோபாதி அடைந்து குடல் கலங்கி உடல் நடுங்கியது. இயற்கை (Nature) இரண்டாமுறை ஏங்கி விம்மிப் பெருமூச் செறிந்தது. மரணகாரணமான ஆதிப்பாவம் முற்றுப்பெற்றதைக் கண்டு, ஆகாயம், தாழ்ந்து இடிக்குமுறலால் முணுமுணுத்துப் புலம்பிச் சில துக்கநீர்த் துளிகள் சிந்தியது".

‡ "கணவன்பெயரைக் கூறலாகாதென்பது முறைமையாதலால், 'அன்னவன்பெயரினைத் தெரிகுதிர்' என்றாள்".

"சனகன் மகள்" என்று சாற்றி "எங்கிருந்து இங்கு வந்தீர்?" என்றாள். அவன்,

இந்திரன் றனக்கும் ஏற்றமாம் இந்திரன்;
மன்மதன் றனக்கும் வனப்பாம் மன்மதன்;
பிரமதேவன் பெருங்குலத் துதித்தோன்;
மூன்றுல கத்தையும் முறைமையொ டாள்வோன்;
நான்கு வேதமும் நவிலும் நாவான்;
வலியஎண் திசைக்கரி மருப்பொடி மார்பான்;
ஈசுரன் கயிலையை எடுத்த தோளான்;
அப்பரன் அருளிய திப்பிய வாளான்;
எண்ணிய எண்ணிய யாவும் ஈயக்
கற்பக தாருவும் காம தேனுவும்
கட்கடை நோக்கிக் காத்து நிற்பவன்;
ஏவல் புரிபவர், தேவர் தேவியர்;
திண்கால் வருடல் செருப்பினை இடுதல்
அடைப்பை ஏந்த லாம்பணி செய்பவர்
மேனகை யாதிய வானக மாதரார்;
பிரமன் உதவிய பிரபல வரபலம்
கொண்டவன்; மூன்றரைக் கோடியாம் ஆயுளான்;
எந்நகர்ச் செல்வமும் தன்னகத் தெய்திச்
சந்திர சூரியர் சாய்ந்தொதுங் கிச்செலும்
மேம்பா டெய்திய வியன்நகர் அவன் நகர்;
எவ்வுல கமும்உள ஏழையர் யாவரும்
தன்னைவேட் டுருகித் தவியா நிற்ப,
அன்னவ ரெவர்க்கும் அருளா னுய்த்தன்
மனத்துக் கினியஓர் மாதினை நாடுவான்:
அனையவன் வீற்றிருந் தரசாள் நகரில்
இருக்கும் விருப்பொ டிருந்தேன் சிலநாள்;
திரும்பி யிவ்விடம் சேர்ந்தேன் அணங்கே!

என்று சூழ்ச்சியாகப் பிறன் கூறுவதுபோலத் தன் மேம்பாடுகளை யெல்லாம், தன் பெயரையும் தன் நகர்ப்பெயரையும் வெளியிடாமற் கூறி, அவள் தன்பாற் சிரத்தை"யுடையவளாகித் தன் பெயர் யாது? தன் நகர்ப் பெயர் யாது? என்று கேட்டால் அவள் தன்வசப்படுமாறு மேற்கொண்டு கூறத்தக்கன கூறக்கருதியிருந்தான்.

அப்போது, அவள், "மாதவர் வாழும் வனத்தில் வாழாமல், பாதகர் இருக்கும் பதியிலேன் இருந்தீர்?" என்றாள். அவன், "இராக்கதர், தேவரினும் தீயரல்லர்; எம்போலியர்க்கு நல்லவர்" என்றான். அவள், இராக்கதர் மாயையால் வேண்டிய உரு எடுப்பரென்பதை அறியாளாதலால், அவனை அரக்கனென ஐயப்படாமல், "தீயவரைச் சேர்ந்தவர் தீயவராவர்" என்றாள். அவன், தன்பாற் சந்தேகமுற்றாளென் றுன்னி, அதனை மாற்ற எண்ணி "ஆற்றல் மிகுந்த அரக்கரை அநுசரித்தலன்றி முப்புவன வாசிகளுக்கும் தப்பும்வழி யாது?" என்றான். 'இராகவனால் இராக்கதரெல்லாரும் இறப்பர். பின்பு உலகுக்குத் துன்பம் இல்லை" என்றாள். "அற்ப மனிதர் அரக்கரைச் செயிப்பரென்றால், ஆனையை முயல் கொல்லும்; சிங்கத்தை மான் கொல்லும்" என்றான். "விராதன் கரன் முதலிய இராக்கதரைக் காகுத்தன் கொன்றதை அறியீரோ? அவனால் இலங்கையிலுள்ள எல்லா இராக்கதரும் இறத்தலையும் இமையோர் சிறத்தலையும் நாளையே பார்ப்பீர்" என்றாள். எனவே, கோபித்து, "வில்வலிமை குறைந்த விராதன் முதலியோரை மனிதர் கொன்றார் என்றாய். அந்த அற்ப மனிதப் பஞ்சுகள் இராவணனது இருபது திண்டோட் பெருங்காற்றுக்கு எதிர்நிற்றலாற்றாமற் பறந்தோடியொழிந் தழிந்துபோம். இராவணன் செய்தற்கரியது யாது? அவனை ஆரென் றெண்ணினாய்? அவனாலாகாததொன்றுமின்று" என்றான். "மக்களைக் காட்டிலும் மிக்க தோள்களிருந்தால், வல்லமையுண்டோ? அந்த இலங்கை வேந்தனைச் செயித்துச் சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனனது ஆயிரந் தோள்களை அறத்தெறிந்தவன் இருதோளுடைய ஒரு மானுடன் தானே" என்றாள்.]

### இராவணன் கோபபரவசனாக, அவன் கொண்ட சந்நியாசிவேடம் தானே நீங்கல்.

417 என்றவள் உரைத்த லோடும் எரிந்தன நயனம்; திக்கிற்
சென்றன திரள்தோள்; வானம் தீண்டின மகுடம்; திண்கை
ஒன்றொடொன் றுரைந்த; மேகத் துரும்என எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி பொங்க, விட்டது மாய வேடம்.

இ-ள். என்று சீதை சொன்ன மாத்திரையே, (இராவணன்) கண்கள் (கோபத்தீயெழச்) சுவாலித்தன; (இயல்பிலேயே) திரட்சி

(யாய்ப் பருமை) யான தோள்கள் (கோபத்தாற் பூரித்துப் புடை பருத்துத்) திக்குகளில் (முட்டச்செல்வனபோலச்) சென்றன; (கோபக் கிளர்ச்சியினால் நிமிர்ந்துயர்ந்த தலைகளின்மீதுள்ள) கிரீடங்கள் ஆகாயத்தைத் தொட்டன; கைகள் ஒன்றையொன்று அறைந்து கொண்டன; இடி (முழக்கம்) போலப் (பேரொலி யுண்டாகப்) பல் வரிசைகள் (நெறுநெறென ஒன்றோடொன்று கடிது உரைசிக்) கடித்தன; (இவ்வாறு இராவணன் கோபங்கூர்ந்து வசமிழக்கவே, அவன் கொண் டிருந்த) மாய (ச் சந்நியாசி) வேடம் நீங்கியது; (அவன் அதனை நீக்க நினையாமல் அது தானே நீங்கிய தென்றபடி).

உரும்—இடி. எயிறு—பல். ஒளி—வரிசை. வெகுளி—கோபம். 'என்றிவள்' என்பதும் பாடம்.

இராவணனது திடீரெனத் தோன்றிய கோபமிகுதியால் நிகழ்ந்த மெய்ப்பாடுகள் (உடல் உறுப்புக்களின் செயலும் தோற்றமும்) நன்றாக வருணிக்கப்பட்டிருத்தல் நன்குமதிக்கத்தக்கது. 'விட்டது மாய வேடம்' என்ற சிறுத்த வாக்கியம் குறித்தபொருளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் புலப்படுத்தப் பொருத்தமாய் நன்கமைந்திருக்கும் நயம் மிக்க களிப்பை விளைப்பது

### சந்நியாசிவேடம் தவிர்ந்தவன் சுயரூபத்தோடு தோன்றல்

418 இருவினை துறந்த மேலோ ரல்லன்கொல் இவனென் றெண்ணி,
அரிவையும், ஐயம் எய்தா, ஆர்இவன் தான்என் றுன்றும்
தெரிவரும் நிலைய ளாகத் தீவிடத் தரவம் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப் பணம்விரித் துயர்ந்த தொத்தான்.

இ - ள். (வேடம் விலகியதைக் கண்ட) சீதை, (நாம் இதுவரை எண்ணியபடி) இவன் பெரியோர் (களுள் ஒருவர்) அல்லன்போலும் என்று எண்ணிச் சந்தேகம் அடைந்து, இவன் (பெரியாரொருவரல்லனாயின், வேறு) யாவன் (ஆக இருக்கலாம்) என்று தெரியமாட்டாத நிலைமையுடையவளாக, (த் திகைத்துக்கொண் டிருக்கும்போது, இராவணன்) கொடிய விஷத்தையுடைய பாம்பு கோபங்கூர்ந்து படத்தை விரித்து (உயர்த்திக்கொண்டு நிமிர்ந்து) மேலெழுந்ததை ஒத்தான். (தன் சொந்த வடிவம் தோன்ற இருக்கையைவிட் டெழுந்துநின்றா னென்றபடி).

இருவினை - நல்வினை தீவினைகள்-பாப புண்ணியங்கள். அரிவையும் என்பதில் உள்ள உம்மை வேறுபொருளின்றிச் செய்யுளிசை நிறைத்து நின்றது. உரு - அச்சம். கெழுதல் - கெழுமுதல் - பொருந்தல். உரு கெழு சீற்றம்-(கண்டோர்) அச்சமுறும் கோபம். 'அல்லர் கொல் இவர்' 'ஆர் இவர் தாம்' என்பனவும் பாடங்கள்.

இருவினைகளில் எதனைச் செய்தாலும் அதன் பயனை அநுபவித்தற்குரிய பிறவியுறுதல்பற்றிப் பிறப்பை நீக்கி வீடடையவிரும்பும் பெரியோர் தீவினையைச் செய்யாது விலக்குதல்போல நல்வினையையுஞ் செய்யாது விலக்குதல் கருதி 'இருவினை துறந்த மேலோர்' என்றாள்.

“பலதலைகளையுடைய பாம்பொன்று சீறித் தனது படங்களை விரித்துக்கொண்டு நிமிர்ந்துநின்றாற்போல, இராவணன் கோபித்துத் தனது பத்துத்தலைகளையும் இருபதுகைகளையும் பரப்பி வெளிக்காட்டிக்கொண்டு எழுந்து எதிர்நின்றனன் என்பதாம். கீழ் (௨௩-ம் கவியில்) 'ஆமையி னிருக்கையன்' என்றதனால், தனது பத்துத்தலைகளையும் இருபது கைகளையும் வேண்டியபடி அடக்கிவந்தமை கூறியவர், இங்கு அவற்றை வெளிப்படுத்தியமை கூறினார்.”

### அப்போது சீதை அடைந்த நிலைமை.

419. ஆற்றவெம் துயரத் தன்னாள் ஆண்டுற்ற அலக்கண் நோக்கின்,
ஏற்றம்என் நினைக்க லாகும்? எதிர்எடுத் தியம்ப லாகும்?
மாற்றம்ஒன் றில்லை; செய்யும் வினை இல்லை: வரிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற காலத் துயிரெனக் குலைவு கொண்டாள்.

இ-ள். (இராமன் அபாயமுற்றானென்ற எண்ணத்தால் முன்னமே) மிகக்கொடிய துன்பத்தையுடைய (ளாயிருந்த) சீதை (இடிமேல் இடிபோலத் துன்பத்துக்குமேல் துன்பம் உண்டாக, நல்ல பூமாலை பொல்லாத பாம்பானாற்போலப் பரமசாதுவான சந்நியாசி மிகக்கொடிய இராவணனான) அந்தச்சமயத்தில் அடைந்த துன்பத்தை (ஆராய்வுற்று)ப் பார்த்தால், (அதனினும்) அதிகம் (ஆன துன்பம்) ஆக எதனை (எந்தத் துன்பத்தை) நினைத்தல் கூடும்? (நினைக்கக்கூடிய துன்பம் எதுவும் இல்லையென்றபடி. அதிகமான துன்பம் இல்லாமை கிடக்க,) சமம் (ஆன துன்பம்) ஆக(த்தான்) எதனைச் சொல்லுதல் கூடும்? (சொல்லக்கூடிய துன்பமும் ஒன்றும் இல்லையென்றபடி. அவனைக்கண்டு திடுக்

கிட்டுப்பிரமித்திட்டதனால், அவனுக்குப்பேசக்கூடிய) வார்த்தையொன்றும் இல்லை (ஆயிற்று); செய்யக்கூடிய செயலும் (ஒன்றும்) இல்லை (ஆயிற்று); நமன் வந்தடுத்தபோது (நடுங்கும்) உயிர்போல நடுக்கமடைந்தாள்.

'ஆற்ற' என்பது 'அமிழ்தினும் ஆற்ற' (குறள். கூச) என்பதிற்போல 'மிக' என்னும் பொருட்டு. 'துயரத்தன்னாள்'—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; துயரத்தை யுடைய அன்னாளென விரியும். ஏற்றம்—அதிகம். 'என்' என்பது 'என்னுடையரேனும்' (குறள் சகூ0) என்பதிற்போல 'எதனை' யென்னும் பொருள்படவந்து நின்றது. எதிர்—ஒப்பு. வரித்தல்—கட்டல்; விரும்பல் (இலக்கியச் சொல்லகராதி). குலைவு—நடுக்கம். மதிக்கலாகாக் கூற்றம் என்பதும் பாடம்.

ஏற்றம் என் நினைக்கலாகும்? எதிர் (என்) எடுத்தியம்பலாகும்? என, ஏற்றம் என்பதன் பின்னுள்ள என் என்பதை எதிர் என்பதன் பின்னும் கூட்டிப் பொருள் கூறப்பட்டது. சீதை உற்ற துன்பத்தினும் பெரிதான துன்பம் நினைத்தற்கரிதென்பார் 'ஏற்றம் என் நினைக்கலாகும்?' என்றார். அத்துன்பத்துக்குச் சமமான துன்பம் ஒருகால் நினைக்கக்கூடுமாயினும் சொல்லக்கூடாததென்பார் 'எதிர் (என்) எடுத்தியம்பலாகும்' என்றார். இவ்வாறு 'எதிரெடுத்தியம்பலாகும்' என்பதை இரண்டாம்அடியின் முற்பாதியுடன் சேர்த்துப் பொருள் கூறாமல், மூன்றாம் அடியில்வரும் "மாற்றமொன்றில்லை செய்யும் வினையில்லை" என்பவற்றோடு தொடர்படுத்தி "அவனெதிரிலே நின்று தைரியத்தோடு எடுத்துச்சொல்லத்தக்கதொரு வார்த்தையுமில்லை; (அவனைவிட்டுத் தப்பிப்போதற்காகச்) செய்யத்தக்கதொரு செயலுமில்லை" என முந்திய உரைகாரர் பொருள் கூறியிருத்தல் காண்க.

எவருயிரையும் அவர் ஆயுளிறுதியில் தன் காலபாசத்தாற் கட்டுதலன்றித் தான் எவராலும் கட்டப்படாத இயமனென்பார், 'வரிக்கலாகாக் கூற்றம்' என்றாரெனலாம்: விரும்பக்கூடாத—வெறுக்கத்தக்க—இயமனெனப் பொருள்செய்தலுமாம். 'வரித்தல்' என்பதற்கு, அதன் பொருளான கட்டுதலின் பொருளான 'தடைசெய்தல்' என்பதைத் தாற்பரியப்பொருளாகக்கொண்டு 'வரிக்கலாகாக் கூற்றம்' என்றதற்குத் 'தடுக்கவொண்ணாத யமன்' என முந்திய உரைகாரர் பொருள்கூறியிருக்

கின்றனர். 'மதிக்கலாகாக் கூற்றம்' என்ற பாடத்துக்கு (இவ்வளவென) வரையறுக்கமுடியாத (வலிமையுங் கொடுமையுமுடைய) யமன் எனப் பொருள்கொள்ளலாம்.

சீதையின் துன்பமும் நடுக்கமும் மிக உருக்கமாக நம் கண்ணெதிர் கண்டாற்போலப் புலப்படும்படி வருணித்திருக்கும் கவிநயம் நன்கு மதிக்கத்தக்கது.

## இராவணன் சீதையைப் பயவார்த்தையாலும் நயவார்த்தையாலும் வயமாக்கமுயலல்.

[இராவணன் குலைகுலைந்துகொண்டிருந்த சீதையைநோக்கித் "தேவர்களை ஊழியர்களாகும்படி செய்திருக்கின்ற என்னுடைய வல்லமையை மதித்தாயில்லை. அற்பமனிதரை ஆற்றல் மிக்கவரென்றாய். இப்படிச் சொல்லிய நீ பெண்பாலாதலாற் பிழைத்தாய். அன்றி, நீ இறந்தால் யானும் இறவாதொழியேனாதலால், உன்னைக் கொல்லாது விட்டேன்" என்றான்.]

420. "குலைவுறல் அன்னம் முன்னம் யாரையும் கும்பிடாஎன்
தலைமிசை மகுடமென்னத் தனித்தனி யினிது தாங்கி,
அலகில்பூண் அரம்பை மாதர் அடிமுறை ஏவல் செய்ப,
உலகமீ ரேழும் ஆளும் செல்வத்துள் உறைதி" என்றான்.

இ-ள். ("உன்பிழையைப் பொறுத்தேன்.) அன்னம்போல்வாளே! நடுக்கமடையாதே. (இதற்கு) முன் யாருக்கும் வணங்காத என், தலைமேல் (விளங்கும்) கிரீடம்போல (உன்னை எடுத்துத் தூக்கி ஒவ்வொரு தலையிலுமாகத் தனித்தனியே மகிழ்வோடுவைத்துச் சும (ந்து நான் உபசரி) க்க, (உன் கற்பினைப்படி) தேவமாதர் ஏவல் செய்யப் பதினான் குலகங்களையும் (பாதுகாத்து) அரசாளும் (என் இராச்சியச்)செல்வ (த்துக்குத் தலைவியாய் அந்த மிக உயர்ந்த செல்வ வைபவ) த்தில் (இனிது) வாழ்வாயாக" என்றான்.

குலைவுறல் - நடுக்கமடையாதிருப்பாயாக. அன்னம், உவமை ஆகுபெயராய்ச் சீதையைக் குறித்தது. தாங்கி, தாங்க என்பது தாங்கியென நின்ற செயவெனெச்சத்திரிபு. "சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை". அன்றித் தாங்கப்பட்டு என்பது படுவிகுதி தொக்குத் தாங்கி யென நின்றதென்னலாம். இதுபோல இப்படலம் அ-அ-ம்

பாட்டில் "பாழிவன் கிரிக ளெல்லாம் பறித்தெழுந்து......உதிர" என்பதில் பறிக்கப்பட்டு என்ற பொருளில் 'பறித்து' வருதல் காண்க. அடிமுறை ஏவல்செய்ய—அடி (க்கீழ்ப்பட்டுச் செய்பக்கடவனவாக) முறை (யாக ஏற்பட்ட) பணிவிடைகளைச் செய்ய.

[கேட்கத்தகாதவார்த்தைகளைக் கேட்டதனால், சீதை செவிகளைச் சிக்கெனப் பொத்திச் சினமீக்கூர்ந்து "தேவர்க்குரிய அவிர்ப்பாகத்தை நாய் விரும்பியதுபோலக் காகுத்தனுக்குரிய கற்புடைய என்னைக் காமித்து என்ன சொன்னைடா இராக்கதா! புல் நுனியில் தங்கிய சிறு பனிநீர்த்துளிபோல வெகு விரைவாக நீங்குந்தன்மையுடைய அற்பமான ஆவியை இழத்தற்கஞ்சி இறப்பிறந்தவர்கள் கற்பிழந்திடுதல், என்றும் எங்கும் இல்லை. யான் என் உயிர்தப்ப உன்வசமாதலைக் கருதாயாகி, நீ உன் உயிர்தப்ப ஓடிக் காகுத்தன்கணைகள் உன்னைத் தொடருமுன் ஒளிப்பாயாக" என்றாள். அவன் "திசையானைக் கொம்புகளின் வலிமையைச் சிதையச்செய்த என் மார்பில் எய்யும் ராமபாணங்கள் கல்மலைமேல் எறியும் காமபாணங்கள் (புஷ்பங்கள்) போலாம். திருமகளுக்குத் திருமகளான நீ, உன் ஆசையால் வருந்தி மெலிந்த எனக்கு அருளாயானல், இறந்தேபோம் என்னுயிரைக் காத்தருளித் திரிலோகாதிபதியாயுள்ள எனக்கு இறைவியாகித் தேவமாதர் யாவர்பதவியினுஞ் சிறந்தபதவியைக் கைக்கொள்வாயாக." என்று பாதத்தடியில் விழுந்து பணிந்தான்.

## இராவணன் சீதையைத் தரையுடன் பேர்த்தெடுத்துத் தேர்க்கண்வைத்துச் செலவுதல்.

அதுகண்டு சீதை, வாளால் வெட்டுண்டு மாள்வாள்போல மனங்கலங்கி, இறையோனே! இளையோனே! என்று கூவி ஏங்கினாள். அப்போது, இராவணன், "மனமிசையாத மாதரைத் தொடுவாயெனில் மடிவாய்" என மலரோன் வழங்கிய சாபமுடையவனாதலால், சீதையைத் தீண்டானாய் அவளிருந்த தரையோடு பேர்த்தெடுத்துத் தேர்மேல்வைத்துச் செல்வானானான். அவள், வெந்தீயால் வெதும்பிய மென்கொடிபோல விழுந்து புரண்டு, எழுந்து தருமதேவதையே! நீயே தஞ்சம்: காப்பாயாக என்று கதறினாள். பெருந்துன்பத்தாற் பித்துப்பிடித்தவள் போலாகி "மான்களே! மயில்களே! யானைகளே! சிங்கங்களே! என்னை

விட்டு நீங்கும் என் உயிரே! நீங்கள் சென்று என் நிலைமையை என் நாயகன்பாற் சொல்லுங்கள்! அவன்வந்து அம்பெய்து என்னை மண்ணோடு பேர்த்தெடுத்த மாபாவியின் இருபதுகைகளோடு பத்துத்தலைகளையும் கொத்துக்கொத்தாக அறுத்தெறிந்து சிதறிவிழச்செய்வதைக் கண்டு சிரியுங்கள்" என்றாள்.

### சீதை சொன்னதைக் கேட்டு இராவணன் பரிகசித்தல்.

"சின்ன மனிதரா என்னைக் கொன்று உன்னை மீட்பார்கள்?" என்று இராவணன் கைதட்டிக் கடகடவென்று சிரித்தான் அவள், "பாவீ! வஞ்சகமாக மாயமானை ஏவி, உன் உயிருக்கு யமனான என் நாயகனை என்னைவிட்டு நீக்கிக் கள்வர்போல என்னைக் கவர்ந்து கொண்டு போகின்றாய். உன்னைக் காத்துக்கொள்ள வல்லமையுள்ளாயெனில், தேரை நிறுத்து. உன் கூட்டத்தாரான அரக்கரைக் கொன்று உன் தங்கை மூக்கைக் கொய்தவர்கள் இந்த வனத்தில் இருக்கின்றார்கள். அவர்களை எளியமனிதரென்று இகழும் நீ, அவர்களுக்கு அஞ்சியன்றோ, வஞ்சஞ்செய்தாய்?" என்றாள். அவன், "அறியாது கூறினாய். யான் சொல்வதைக் கேள். வலியற்ற மனிதரோடு நான் போர்புரிவேனானால், அது, வெள்ளிமலையை வேரோடெடுத்த என் வீரத்தோள்களுக்கு மிக்க பழிப்பை விளைக்கும். ஆகலால், சமர்செய்தலினும் சாலப் பயன்தருவது வஞ்சகம்" என்றான். அவள், "ஆம்! சத்துருக்களை எதிர்ப்பது தப்பு. விற்போர்புரிவது வெட்கம். வஞ்சகத்தால் மாதரைக் கவர்வது வல்லமை. இரக்கமற்ற அரக்கருக்குப் பாவமேது! பழியேது!" என்றாள்.

### இராவணனை எதிர்த்துச் சடாயு சமர்செய்தல்.

அப்போது, "எங்கடாபோவது? நில்லு! நில்லு! என்று அதட்டிக்கொண்டு கனற்பொறி காலும் கண்களும் மின்னென விளங்கும் மூக்கும் உடையனாய் மேருபருவதம் விண்ணிற்செல்வதுபோலப் பறந்து கழுகரசனான சடாயு வந்து எதிர்ந்து இராவணனைநோக்கிச் "சீராமனுடைய தேவியைத் தேரில் வைத்துக்கொண்டு எங்கடா போகின்றாய்?" என்று கூறிச் சீதையைநோக்கிப் "பயப்படாதே" என்று அபய வாக்கு அளித்து, அவளை அவன் தீண்டினானில்லையென்று தெரிந்து சிறிது சினத்தைத் தணித்துக்கொண்டு "எட! முட்டாள்! என் செய்திட்டாய்! உன் வாழ்வைச் சுட்டாய்! கிளையோடு கெட்டாய்!

இவளைவிட்டால் பிழைப்பாய்! இல்லாவிட்டால் இறப்பாய்! அட்டா! நீ செய்த தீயசெயல் இம்மையில் உன்னை உன் உறவினரோடு ஒழிக்கும்; மறுமையில் நரகத்தில் அழுத்தும். இராமன் கொள்ளை கொள்ளையான உன் கூட்டத்தாரைக் கொன்றதறியாயோ? கொல்லவந்த யானைமீது கல்லையெறிந்து கோபமூட்டினையே. காகுத்தன்முன் கடவுளர் மூவரும் புலிமுன் புல்வாய்கள் போல்வார். அவன் வருமுன் இவளை விட்டுப் போய்விடு. இவளை நான் அவனிடம் சேர்ப்பேன். அவன் வந்து உன்னைக் கண்டுவிட்டானானால், நீ சாவது தப்பாது. அதனைத் தடுத்தல் ஆராலும் ஆகாது" என்றான்.

இராவணன் கோபித்துக் கண்கள் சிவந்து, வாய்மடித்து "உன் நெஞ்சூடு என் அம்புகள் புகுமுன் அப்பாற்போவாயாக. என் வசப்பட்ட இவளை எவராலும் விடுவிக்க முடியாது" என்றான். அது கேட்ட சீதை அதிகமாக அச்சமடைய, அவளை நோக்கிச் சடாயு "இராமன் வில்லேந்தி விடுவிக்க வரவில்லையே யென்று வருந்தாதே. இவன் பத்துத் தலைகளையும் கொத்துக் கொத்தாகப் பனங்காய்கள் போலக் கொத்திப் பறித்தெறிந்து இவன் செயித்த பத்துத்திக்கிலும் திக்குக்கொன்றாகப் பலியிடுவேன்" என்று கூறி, அவ்வாறே செய்யத் தொடங்கி முதலில் இராவணனது வீணைக்கொடியைக் கடித்து ஒடித்து வீழ்த்தினான். இதுவரையும் இவ்வாறு ஈடழியாத இராவணன், கண்கள் அதிகமாகச் சிவக்கப் புருவவில் வளையக் கைவில்லை வளைத்துக் கணைகளெய்தான். அவைகளை மூக்காலும் காலாலும் சிறகாலும் ஒடித்தெறிந்து இராவணன் குண்டலங்களைச் சடாயு பறித்தான். இவன்மேல் அவன் அதிக வன்மையுடைய அம்புகளைச் செலுத்தி இரத்தம் வடியும்படி செய்தான். சிறிது சோர்ந்து தெளிந்து திரும்பவும் எதிர்த்து இருபது தோள்கள்மேற் பாய்ந்து கவசத்தை யறுத்தான். அவன் திரும்பவும் அம்புகளெய்யச் சினந்தெதிர்த்து வில்லைப் பறித்தான். அவன் தனக்குப்பலமாயிருந்த வில்லொழியவே, யாதுசெய்வதென்றாலோசித்துச் சூலாயுதத்தையெடுத்துச்சுழற்றியெறிந்தான். "இராவணா! என் வலிமையைப் பார்ப்பாயாக" என்று அந்தச்சூலாயுதத்தைச் சடாயு தன் மார்பில் ஏற்றுக்கொள்ளும்படி இறுமாந்து நின்றான்.]

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணிய முதலியார்.

# தொல்காப்பியமும் வடமொழிச் சிக்ஷைப் பிராதிசாக்கிய நிருக்தங்களும்.

தமிழ் லெக்ஸிகனாபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணிய சாஸ்திரி (M,A., L.T.) அவர்கள்
எழுதியது.

---

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தும் சொல்லதிகாரத்தும் உள்ள சில சூத்திரங்களுக்கும் வடமொழியிலுள்ள பாணினி சிக்ஷை, பிராதி சாக்கியங்கள், யாஸ்கநிருக்தம்: இவற்றிலுள்ள சில சொற்றொடர்களுக்கும் எல்லோரும் வியக்கத்தக்க ஒற்றுமை காணப்படுகின்றது. அவை பின் வருமாறு:—

க. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியலத்
திறப்படத் தெரியுங் காட்சி யான. (எழுத். பிறப்பியல்-க.)

𑌮𑌾𑌰𑍁𑌤 𑌸𑍍𑌤𑍂𑌰𑌸𑌿 𑌚𑌰𑌨𑍍 𑌮𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑌮𑍍 ।

... ... ... ... ...

𑌕𑌣𑍍𑌠𑍇 𑌮𑌾𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌯𑍁𑌗𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌤𑍍𑌰𑍈𑌷𑍍𑌟𑍁𑌭𑌾𑌨𑍁𑌗𑌮𑍍 ।
𑌤𑌾𑌰𑌂 𑌤𑌾𑌰𑍍𑌤𑍀𑌯𑌸𑌵𑌨𑌂 𑌶𑍀𑌰𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌜𑌾𑌗𑌤𑌾𑌨𑍁𑌗𑌮𑍍 ।
𑌸𑍋𑌦𑍀𑌰𑍍𑌣𑍋 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌭𑌿𑌹𑌤𑍋 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌪𑌦𑍍𑌯 𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ।

𑌵𑌰𑍍𑌣𑌾𑌞𑍍𑌜𑌨𑌯𑌤𑍇... ... ... ... ... ।
𑌅𑌷𑍍𑌟𑍌 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑍁𑌰𑌃 𑌕𑌣𑍍𑌠𑌃 𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌮𑍂𑌲𑌂 𑌚 𑌦𑌨𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌨𑌾𑌸𑌿𑌕𑍋𑌷𑍍𑌠𑍌 𑌚 𑌤𑌾𑌲𑍁 𑌚 ।

(பாணினிசிக்ஷை)

உ. ககார ஙகார முதனா வண்ணம். (பிறப். எ)

ஹநுமூலே ஜிஹ்வாமூலேந கவர்கே ஸ்பர்ஶயதி

(தைத்ரீயப்ராதிசாக்யம் -2-35)

ங. சகார ஞகார மிடைநா வண்ணம். (பிறப். அ.)

தாலௌ ஜிஹ்வாமத்யேந சவர்கே (தை. ப்ரா. 2, 36)

தாலௌ ஸ்தாநா மத்யேந (சுக்லயஜுர்வேதப்ராதிசாக்யம்-1,79.)

தாலவ்யாநாம் மத்யஜிஹ்வம் । (அதர்வவேதப்ராதிசாக்யம்-1,21.)

ச. அண்ண நண்ணிய பன்முதன் மருங்கின்
நுனிநா பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம். (பிறப். கக)

ஜிஹ்வாக்ரேண தவர்கே தந்தமூலேஷு । (தை-ப்ரா-2,38.)

தந்த்யாநாம் ஜிஹ்வாக்ரம் ப்ரஸ்தீர்ணம் । (அ. ப்ரா. 1,24.)

ரு. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம். (பிறப். கரு)

ஓஷ்டாப்யாம் பவர்கே । (தை. ப்ரா. 2, 39.)

சு. பல்லித ழியைய வகாரம் பிறக்கும். (பிறப். கசு)

ஓஷ்டாந்தாப்யாம் தந்தைர் வகாரே । (தை. ப்ரா. 2,43.)

எ. சார்ந்துவரி னல்லது. (பிறப். க௯)

ஃகஃபவளவா விஜ்ஞேயா ஆஶ்ரிதா: । (பா. சி.)

அ. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

(சொல். பெயரியல். க.)

அர்த: பதம் । (சு. ய. ப்ரா. 3, 2.)

கூ. இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.

(இடையியல். க.)

உபஸர்கா விம்ஶதிரர்தவாசகா: ஸஹேதராப்யாம் ।

(ருக்வேதப்ராதிசாக்யம். 12, 6.)

கo. சிறப்போடு..............ஓகா ரம்மே.

ககூ. பிரிநிலை..................ஓகா ரம்மே. (இடை. அ.)

(கo) விதர்கஜாயாழ் । (யாஸ்கநிருக்தம். 33, 12.)

(கக) ஸஹஜதிவ ஹஜதிவ விநிக்ரஹாய்ஸியள । (யா. நி. 37,2)

கஉ. அந்தி லாங்க வசைநிலைக் கிளவி. (இடை. கக.)

ஸயோவிவடிவ-ர்ணா ஜடிஷடிஜடி । (யா-நி. 37, 4.)

கங. பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்.

கச. ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்.

கரு. பயிலா தவற்றை (உரி. க.)

(கங) வஹகாயடீஜெநகஸஹவத்தெந்தஜ்ஞாஸு ்। (யா. நி. 266,1)

(கச) யாநாெநகஸஹவாநிதாநாெதாzநாக்ரிஷாஃ ॥ (யா. நி. 266,2.)

(கரு) ஸநவமதஸஸம்ஹாராநுநிமரோநு । (யா. நி. 266,3)

கசு. வெளிப்படு சொல்லே. (உரி. உ)

ஸம்விஜ்ஞாதாநிதாநி । (யா. நி. 56-4.)

கஎ. உறுதவ நனி யிகுதிப் பொருள. உரி. ங.)

உரதவிவா......ஜதிஉாவஸ ஸஹநாமாதி । (யா நி)

நிருக்தத்திற் சொற்களின் தொகுதியை இரண்டாகப்பிரித்துப் பெயர்கள் ஒன்றாகவும் வினைகள் ஒன்றாகவும் கூறப்பட்டன. மேலும், முதல் 2, 3, 4 அத்தியாயங்களில் ஒருபொருள்கொண்ட பல சொற்களும் அதன்பின் பலபொருள்கொண்ட ஒரு சொற்களும் கூறப்பட்டன. அவ்வாறே தொல்காப்பியத்திலும் 'தீர்தல் தீர்த்தல்'.......(தொல். சொல். 318) முதலிய வினைப்பகுதிகள் தனிச் சூத்திரங்களிலும் கதழ்வு, துனைவு, விரைவு முதலிய பெயர்ப்பகுதிகள் தனிச்சூத்திரங்களிலும், ஒருபொருள்கொண்ட பலசொற்கள் முன்னரும், பலபொருள்கொண்ட ஒருசொற்கள் பின்னரும் கூறப்பட்டன.

உ

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[உஎ-ம் தொகுதியின் சூகூ0-ம் பக்கத்தொடர்ச்சி.]

421-வது சூத்திரம். *உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனர் புலவர்.

கபிலனும் பரணனும் என்பது தொகும்போது கபிலபரணன் என்று தொகுமா? கபிலபரணர் என்று தொகுமா? என்ற ஐயத்தை நீக்கிற்று இச்சூத்திரம்.

422-வது சூத்திரம். வாரா மரபின வரக் கூறுதலும்
..................................

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'நிலம் வல்லென்றது' என்று கூறினதைச் சேனுவரையர் 'சொலற்பொருளவன்மையின், அவை காட்டல் அவர் கருத்தன்றெனக' என்று கூறி மறுத்தனர்.

பாடபேதம்:—இளம்பூரணத்தில் 'நிலம் வல்லென்றது' என்பதற்குமேல் 'நீர் தண்ணென்றது' என்றிருக்கவேண்டு மென்பது சேனுவரையத்தால் அறியப்படுகின்றது.

423, 424-வது சூத்திரங்கள்:—

இசைபடு பொருளே நான்குவரம் பாகும்.
விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்.

பாடபேதம்:— இளம்பூரணத்திலும் தாமோதரம்பிள்ளையவர்கள் சேனுவரையப்பதிப்பிலும் இசைபடுபொருளே என்றுள்ளது. மற்றப் பதிப்புக்களில் இசைப்படுபொருளே என்றுள்ளது.

---

*இச்சூத்திரமும் ஜாதிரவூராணி நாமு (பாணினி. 2, 4, 6) என்ற அஷ்டாத்தியாயீசூத்திரமும் அநேகமாய் ஒரேபொருளை யுணர்த்துகின்றன.

இளம்பூரணத்தில் 'அவ்விரண்டெண்ணின் நான்காகப்படும் அசைநிலை' என்றுள்ளது. அவ்விரண்டெண்ணின் நான்காகப்படும் என்பதற்குப் பிரதியாக அவ்விரண்டெண்ணினு லடுக்கப்படும் என்று இருத்தல்வேண்டும்.

சேனாவரையர், 'முன்னர்க்கூறப்படும் அசைநிலை அடுக்கிவருமென்பது அதிகாரத்தாற் கோடற்பொருட்டு, 'இசைநிறையசைநிலை' என்னுஞ் சூத்திரத்தின்பின் வையாது இச்சூத்திரமிரண்டனையும் ஈண்டு வைத்தார்' என்று கூறுவது பொருத்தமாகத்தோன்றவில்லை.

தெய்வச்சிலையார் இவ்விரண்டுசூத்திரங்களுக்குமுன் 'இசைநிறையசைநிலை......' என்னுஞ் சூத்திரத்தை வைத்தது மிகப் பொருத்தமாயுள்ளது.

| | |
|---|---|
| | கண்டீ ரென்று கொண்டீ ரென்று |
| 425-வது | சென்ற தென்று போயிற் றென்று |
| சூத்திரம் | வன்றி யனைத்தும் வினாவொடு சிவணி |
| | நின்றவழி யசைக்குங் கிளவி யென்ப. |

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:— வினைச்சொற்கள் இங்ஙனம் வினாவொடுபட்டு நின்றவழியாயக்கால் அசைச்சொல்லாய்நிற்கும் என்பது கருத்து.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:— கண்டீரெனவும், கொண்டீரெனவும், சென்றதெனவும், போயிற்றெனவும் வரும் வினைச்சொல் நான்கும், வினாவொடுபொருந்திநின்றவழி, அசைநிலையடுக்காம் எ-று.

தெய்வச்சிலையார்:—கண்டீர் என்பது முதலாக ஓதப்பட்ட சொற்கள் வினாப்பொருள் உணர்த்துஞ் சொல்லொடுகூடிநின்றவழி அப்பொருளினை யிசைக்குஞ் சொல்லாம் எ-று. எனவே அச்சொற்களோடு கூடாதவழி அசைநிலையாமென்றவாறும்.

உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் கூறும் பொருள் ஒன்றே தெய்வச்சிலையார்கூறுவது வேறு. சூத்திரத்தில் அசைக்கும் என்பதற்குப் பிரதியாக இசைக்கும் என்பது அவரது பாடமாகையால் அவ்வாறு கூறினரேனும், 'கேட்டை யென்று......' (தொல்-சொல். 426) என்ற மேற்சூத்திரத்தில் 'முன்னுறக் கிளந்த

வியல்பா கும்மே' என்பதற்கு அசைநிலையாகும் என்று அவரே பொருள் கூறினமையின், உரையாசிரியர்முதலோரின்கொள்கையே பொருந்தும். அவ்வாறாயின் தெய்வச்சிலையார்காட்டிய 'படையிடு வான் மற்கண்டீர்—காமன் படையடும் பாலொடு கோட்டம் புகின்' என்ற உதாரணத்திற் கண்டீர் என்பது அசைநிலை யென்று எதனாற் பெறப்படுமெனின், 'செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்...' (தொல்-சொல். 463) என்ற புறனடைச்சூத்திரத்தாலெனக.

பாடபேதம்:— இளம்பூரணத்திலும், நச்சினார்க்கினியத்திலும், தெய்வச்சிலையாருரைப் பாடத்திலும் நின்றவழியிசைக்கும் என்றும், சேனாவரையத்தில் நின்றவழியசைக்கும் என்றும் பாடம் காணகின்றது. உரையில் உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் இசைக்கும் என்பதற்கு அசைநிலைபாய்நிற்கும் என்று பொருள்கொள்வதனால், அசைக்கும் என்ற பாடமே அவர்கள் கொண்டதாதல்வேண்டும்.

கேட்டை யென்ற நின்றை யென்ற
426-வது காத்தை யென்ற கண்டை யென்ற
சூத்திரம். வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே.

இச்சூத்திரத்திற்கண்ட முன்னிலையல்வழி என்பதற்கு உரையாசிரியர் முன்னைய நான்கும்போல வினாவோடுபடாது வாளாதேநின்றவழி என்றும், ஏனையோர் மூவரும் முன்னிலை யல்லாக்கால் என்றும் பொருள்கொண்டனர். சேனாவரையர் 'வினாவொடுசிவணல் இவற்றிற் கொன்றாணெய்தாமையின் விலக்கவேண்டா; அதனான் அவர்க் கது கருத்தன்றென்க' என்று உரையாசிரியரை மறுத்தனர்.

இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
427-வது தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
சூத்திரம். மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மீரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலம் என்னும் மூன்றுகாலமும் உடையவாய்த் தன்மை முன்னிலை படர்க்கை யென்

னும் மூன்றிடத்தும் வினையும் வினைக்குறிப்பும் பற்றி, அம்மூன்றிடங்க டோறும் வினையும் வினைக்குறிப்பும் என இரண்டாம்: அவ் வறு கூற்றுச் சொற்களை முற்றுச்சொல் என்று கூறுப ஆசிரியர் எ-று.

சேனுவரையர்:— முற்றுச்சொல்லாவது, இறப்பு நிகழ்வு எதிர் வென்னும் மூன்று காலமும் தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூன்றிடத்தும், உயர்திணையும் அஃறிணையும் இருதிணைப்பொதுவு மாகிய பொருடோறும், வினையானுங் குறிப்பானும் இவ்விரண்டாய் வரும் அவ் வறுவகைச்சொல்லாமென்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

நச்சினார்க்கினியர்:— தன்மை முன்னிலை படர்க்கை யென்று சொல லப்பட்ட அம்மூன்றிடத்தின்கண்ணும் வரும் உயர்திணை அஃறிணை விரவுத்திணை யென்னும் மூவகைப் பொருடோறும், தெரிநிலைவினையா னுங் குறிப்புவினையானும் இவ்விரண்டாய்வருமெனவு யான முற்கூறிய அவ் வறுவகைச் சொல்லை இறப்பு ஒன்றுனும்நிகழுஞ் சிறப்புடை மையானும், நிகழ்வு ஒன்றுனும்நிகழுஞ் சிறப்புடைமையானும், எதிர்வு ஒன்றுனும்நிகழுஞ் சிறப்புடைமையானும், அம் முக்காலத்தும் நிகழும் சிறப்புடைமையானும் இயலும் முற்றுச்சொல் லென்று பெயர்கூறுவர்.

தெய்வச்சிலையார்:—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என வினைச்சொற்குச் சிறப்புடைத்தாகிய மூன்றுகாலத்தானும், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்தானும் தொழிலானும் குறிப் பானும் பொருளானும் முற்று இயலும் மொழிவகைநிலைமையான் இருபத்துநான்கு எ-று. அவையாவன:—தன்மைக்கண் எட்டும் முன் னிலைக்கண் எட்டும், படர்க்கைக்கண் எட்டும், (ஆ ப). ஒருமையும் பன்மையும் எனத் தமிழ்நடை இருவகைப்படுதலின் தன்மைக்கண் வரும் எட்டும் ஒருமை உணர்த்துவன நான்கும், பன்மையுணர்த்துவன நான்கும் என இருவகைப்படும்.

சூத்திரத்தில் மெய்ம்மை என்ற சொல் வினையையும் வினைக்குறிப் பையும் குறிக்கின்றது என்று கூறினர் உரையாசிரியர்; உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை இம்மூன்றையுங் குறிக்கின்றது என்றனர் சேனுவரையரும் நச்சினார்க்கினியரும். ஒருமை, பன்மை இவற்றைக் குறிக்கின்றது என்றனர் தெய்வச்சிலையார்.

சூத்திரத்தில் ஈரிரண்டாகும் அவ்வாறு என்பதற்கு இருபத்து நான்கு என்று தெய்வச்சிலையார் கூறும் பொருள் நன்கு பொருந்துகின்றது. மேலும் 'பிரிநிலை வினையே...ஆயீரைந்து...' (தொல். சொல். 430) என்ற சூத்திரம் எஞ்சுபொருட்கிளவி பத்து வகைப்படும் என்று உணர்த்தியவாறு. இச்சூத்திரமும் முற்றுவினை இருபத்துநான்குவகைப் படும் என்று உணர்த்திற்று என்பது பொருத்தமுடைத்து.

இச்சூத்திரத்தாற் பயன் யாது என்று வினவி 'அச்சொற்கு முன்பு முடிபுகூறி, ஈண்டுக் குறியிட்டான் என்பது பயன்' என்று கூறினர் உரையாசிரியர். சேனாவரையர் 'குறியீடு கருத்தாயின், 'அவ்வாறென்ப முற்றியன் மொழியே' என்னாது அவ்வாறும் முற்றியன்மொழி எனல் வேண்டுமாகலான், அது போலியுரை யென்க. முற்றியன்மொழி யென்ப என மொழிமாற்றவே குறியீடாமெனின் குறியீடு ஆட்சிப் பொருட்டாகலின், அக்குறியான் அதனை யாளாமையான், மொழிமாற்றி யிடர்ப்படுவதென்னையோ வென்பது. அல்லதூஉம், முற்றியன்மொழி யெனக் குறியிட்டாராயின், இவை பெயரெஞ்சுகிளவி யெனவும், இவை வினையெஞ்சுகிளவி யெனவுங் குறியிடல்வேண்டும்; அவ்வாறு குறியிடாமையானும் அது கருத்தன்றாம்' என்று உரையாசிரியர் கொள்கையை மறுத்து 'அதனான் வினைச்சொல்லுள் இருவகையெச்ச மொழித்து ஒழிந்த சொல் முற்றிநிற்கு மென்றும், அவை இனைத்துப் பாகுபடுமென்றும் உணர்த்தல் இச்சூத்திரத்திற்குக் கருத்தாகக்கொள்க' என்றனர். நச்சினார்க்கினியர் "'அம்மாம்....' என்னுஞ் சூத்திரமுதலாகப் 'பல்லோர் படர்க்கை...' என்னுஞ் சூத்திரம் இறுதியாக மூவகை யிடமும் மூவகைப் பொருளும் இருவகை வினையும் எடுத்தோதியவற்றை ஈண்டும் ஓதியது அநுவாதமாயிற்று. ஆண்டு ஓதாது எஞ்சிநின்ற காலமுங் குறியீடும் ஈண்டு ஓதியது இலக்கணமாயிற்று. முன்னர்க் 'குறிப்பினும் வினையினும்....' என்னுஞ் சூத்திரத்தில் 'காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்....' என்றது மூவகை வினைக்கும் பொதுவாய்நின்று ஒரோவோர் முற்றுவினையும் முக்காலமும்பெற்றே வருமென்னும் ஐயம் நிகழ்த்திற்று; அதனை ஒரோவோர் காலம்பெற்றுவருவனவும் முக்காலம்பெற்றுவருவனவுமாய்நிற்கும் முற்றென ஐயம் அகற்றினர் இச்சூத்திரத்தான்" என்றார்.

சேனாவரையர் இங்கு 'வினைச்சொல்லுள் இருவகை யெச்சமொழித்து ஒழிந்த சொல் முற்றிநிற்குமென்றும், அவை இனைத்துப் பாகுபடுமென்றும் உணர்த்தல் இச்சூத்திரத்திற்குக் கருத்தாகக் கொள்க' என்றாரேனும், முன்பு "முற்றிநிற்றல் முற்றுச்சொற் கிலக்கணமாதல் 'முற்றியன் மொழியே' என்பதனாற் பெற்றாம்" என்று கூறினமையான் 'அவை இனைத்துப் பாகுபடும் என்று உணர்த்தல் இச்சூத்திரத்தில் விதேய மாகும் என்பதே அவர் கருத்தாகும்.

நச்சினார்க்கினியர் 'காலமுங் குறிப்பீடும் ஈண்டு ஓதியது இலக்கணமாயிற்று' என்று கூறி 'ஓரோவோர்காலம்பெற்று வருவனவும் மூக்காலம்பெற்று வருவனவுமாய்நிற்கும் முற்றென ஐயம் அகற்றினார் இச்சூத்திரத்தான்' என்று கூறுவது முன்னுக்குப் பின் முரணாகின்றது. ஐயம் எதனால் அகற்றப்பட்டது? இனைத்துப் பாகுபடும் என்றதனால் அன்றோ? ஆதலின் இனைத்துப் பாகுபடும் என்று கூறுவதே இச்சூத்திரத்திற்குப் பயன் என்று அவர் கூறவேண்டும்.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் 'சேனாவரையப்பதிப்பிலும், நச்சினார்க்கினியத்திலும்; தெய்வச்சிலையாரிலும் ஈரிரண்டாகும் என்ற பாடம் உளது. இளம்பூரணத்திலும், சைவசித்தாந்தக்கழகச் சேனாவரையப்பதிப்பிலும் இவ்விரண்டாகும் என்றுளது.

தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பில் 'பண்புமாகிய' என்ற சொல் பண்பியுமாகிய என் றிருத்தல்வேண்டும்.

இச்சூத்திரத்தையும் இதற்கடுத்த இரண்டுசூத்திரங்களையும் தெய்வச்சிலையார் வினையியலின் இறுதியிற் கூறினர். எச்சவியலிற் கூறுவதே பொருந்தும்.

423-வது சூத்திரம் எவ்வயின் வினையு மவ்வியல நிலையும்.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர் :— மேற்கூறப்பட்ட முற்றுச்சொல்லையன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் மூன்றுகாலமும் மூன்றிடமும் உடையவாய் வினையும் வினைக்குறிப்புமபற்றி வரும் என்பான் 'எவ்வயின் வினையும் அவ்வியல நிலையும்' என்றான் என்பது. (மற்று, 'வினையெனப்படுவது....' (தொல். வினை 1.) என்புழி எல்லா வினைச்சொல்லும் மூன்று காலத்திற்கும் உரிய எனப்பட்டது, இனி 'எஞ்சிய கிளவி இடத்தொடு

சிவணி-யைம்பாற் குரிய' (தொல் - வினை. 26) என்புழி எவ்விடத்திற் கும் உரிமையுங் கூறப்பட்டது பிறவெனின், மேல் அங்ஙனங் கூறினா ரேனும், அது விலக்குப்பட்டது; ஈண்டுப் போத்தந்து முற்றுச் சொல்லையே விதந்து மூன்றிடத்திற்கும் உரிய என்றமையான். அது நோக்கி மீண்டு இது கூறினார் என்பது).

சேனாவரையர்:— மூவிடத்தாற் பொருடோறும் இவ்விரண்டா மென மேற்சொல்லப்பட்ட கட்டளையுட்பட் டடங்காது பிறாண்டுவரும் வினையும் முற்றியல்பாய்நிலையும் எ-று

நச்சினார்க்கினியர்:— மூன்றிடத்துவரும் வினையெச்சமும் பெய ரெச்சமும் அம்முற்றியல்பிலே நிற்கும் எ-று. (இருவகை எச்சத்திற் குங் 'காலமொடு வரூஉம் வினைச்சொல்லெல்லாம்....' (தொல். சொல். 201) என்ற பொதுவிதியான் முக்காலமும் ஒன்றற்கு வருமோ என், னும் ஐயம் நிகழ்ந்ததனை இச்சூத்திரத்தான் அகற்றினார். முற்றிலக் கணங் கூறுதற்கு இடையே இச்சூத்திரத்தான் எச்ச இலக்கணத்தைக் கூறினார், பருந்து விழுக்காடாக மாட்டேறிற் றென்று கருதி).

தெய்வச்சிலையார்:—தொழிலும் காலமும் இடமும் பாலும் உணர வரும் வினைச்சொலன்றி, மூன்றிடத்திற்கும் பொதுவாகிவரும் வினைச்சொல்லும் முற்றும்நிலைமையைப் பெறும் எ-று. அவையாவன: வியங்கோள், இன்மைசெப்பல், வேறெண்கிளவி, செய்ம்மன, பெயரெச்ச மல்லாத செய்யும் என்னுஞ் சொல்.

சேனாவரையர் தெய்வச்சிலையார் இவ்விருவர் உரையும் ஒன்றே. அஃதே இங்குப் பொருந்தும்,

'வினையெனப்படுவது....' (தொல். வினை. 1), எஞ்சிய கிளவி....' (தொல் வினை 26) என்ற சூத்திரங்களாற் கூறப்பட்ட எல்லா வினை களுக்கு முரிமை 'இறப்பினிகழ்வின்...' (தொல். சொல். 427, என்ற சூத்திரத்தால் விலக்கப்பட்டது என்று உரையாசிரியர் கூறுகின்றார். அச்சூத்திரம் முற்றுச்சொல் என்ற குறியிடுவதற்கு வந்தது என்று அவரே கூறுவதால் அது பொருந்தாது.

சேனாவரையத்தில் 'இனி ஒருசாரா-மேலைச்சூத்திரத்தாற் கூறப் பட்டபொருண்மேலும்வரும் எல்லாவினையும் முற்றுச்சொல்லாய்நிற் கும் எ-று. ஈண்டு வினையென்றது வினைச்சொல்லைாக்கு முதனிலையை,

எல்லாவினையும் முற்றுச்சொல்லாமெனவே, எச்சமாதல் ஒருதலையன்றென்பதாம். ஆகவே வினைச்சொல்லாதற்குச் சிறந்தன முற்றுச்சொல்லே யென்பதாம்' என்றுளது. இதனை நச்சினார்க்கினியர் 'அம்முதனிலை படுத்தலோசையாற் பெயர்த்தன்மைப்பட நிற்குமாறும் எடுத்தலோசையான் முன்னிலையேவலொருமைவினைமுற்றாய்நிற்குமாறும் 'இர் ஈர் மின்...' (தொல். சொல். 224) என்னுஞ் சூத்திரத்துட் கூறினாம்' என்று மறுத்தனர். இவ்வுரையின்பொருள் முதற்பொருளிலேயே அடங்குமாதலானும், இவ்வுரையைக் கொள்ளின் வியங்கோள் முதலியன முற்றுச்சொல்லா அல்லவா என்ற ஐயம் நிற்குமாதலானும் இவ்வுரை சேனாவரையரால் எழுதப்பட்டதன்று. ஆயினும், இதனை நச்சினார்க்கினியர் மறுத்தலால் அவர்காலத்துக்குமுன்பே ஏட்டிற் படிப்போரால் இது சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்பது எனது எண்ணம்.

"இருவகை எச்சத்திற்கும் 'காலமொடு வரூஉம் வினைச்சொல்லெல்லாம்' என்ற பொதுவிதியான் முக்காலமும் ஒன்றற்கு வருமோ என்னும் ஐயம் நிகழ்ந்ததனை இச்சூத்திரத்தான் அகற்றினார்" என்ற நச்சினார்க்கினியர்கொள்கையும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

பாடபேதம்:—இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் 'மேற்கூறப்பட்ட முற்றுச்சொல்லையன்றிப் பெயரெச்சமும்' என்பதற்குமேல் வினையெச்சமும் என்ற சொல் இருத்தல்வேண்டுமென்பதற்கு 'இது முற்றுச்சொல்லொழிந்து ஒழிந்த பெயரெச்ச வினையெச்சங்கட்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று' என்ற உரையாசிரியர் வாக்கியமே தக்க சான்றும்.

அவைதாம்
429-வது தத்தங் கிளவி யடுத்தந வரினு
சூத்திரம். மெய்த்திறத் தானும் பெயர்முடி பினவே.

இச்சூத்திரத்திற்கு உரைகாரர் நால்வரும் ஒருவிதமாகவே பொருள் கொண்டனர். அடுக்குவரினும் என்ற உம்மையால் அடுக்காதுவரினும் என்பது பெறப்படுகின்றது என்று சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் மூவருங் கூறினர். எத்திறத்தானும் என்பது முற்றுவினை, பெயரைப் பின்னடுத்தும் வரும் என்பதனை அறிவிக்கின்றது என்று நால்வரும் கூறினர். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும்

'என்மனார்புலவர்', 'முப்பஃதென்ப' என வெளிப்பட்டும் வெளிப்படா தும் பெயர் முடிபாம்' என்பதனையும் அறிவிக்கின்றது என்றுகூறினர்.

சேனாவரையர் "தம்பாற்சொல்லல்லது பிறபாற்சொல்லொடு விராயடுக்கினமையின், 'தத்தங்கிளவி' என்றார்" என்கின்றனர். தெய்வச்சிலையார் 'தத்தங்கிளவி என்றதனான் ஒரு காலத்திற் கேற்ற வினையே அடுக்குவது என்று கொள்க' என்றார்.

இச்சூத்திரம் எற்றுக்கு எனின் முற்றுவினை அடுக்கிவரின் ஒன்றையொன்று தழுவாது பெயரையே ஒவ்வொன்றும் தழுவும் என்பதை அறிவித்தற்காகும்.

பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
430-வது யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
சூத்திரம். குறிப்பே யிசையே யாயீ ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி.

இச்சூத்திரத்துள்ள எஞ்சுபொருட்கிளவி என்பதற்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் எச்சச்சொல் என்று பொருள்கொண்டனர். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'எஞ்சுபொருட்கிளவி கொண்டல்லது அமையாமையின் எச்சமாயினவும், ஒரு தொடர்க்கு ஒழிபாய் எச்சமாயினவு மென அவை இருவகைப்படும்' என்றனர். பிரிநிலையெச்சம், வினையெச்சம் முதலிய ஏழுக்கும் அவற்றை முடிக்குஞ்சொல் இருக்கின்றன என்பதும் சொல்லெச்சம் முதலிய மூன்றுக்கும் அவற்றை முடிக்குஞ்சொல் இல்லை யென்பதும் அன்னோர் கருத்து. தெய்வச்சிலையார் அவ்வாறுகூறாது எஞ்சுபொருட்கிளவி என்பதற்கு 'சொல்லாதொழிந்தபொருளை இனிதுவிளக்குஞ்சொல்' என்றும், நெறிப்படத்தோன்றுதல் என்பதற்கு வாக்கியமாகிய தொடர்மொழிக் கண் முன்னும் பின்னும் நின்ற சொல்லை நெறிப்படுத்தற்கு ஆண்டுத் தோன்றுதல் என்றும் பொருள் கூறுகின்றனர். மேலும் பிரிநிலை யெச்சம் முதலியவற்றிற்கு அவர் கூறும் பொருள் வருமாறு:—பிரிநிலை எச்சமாவது பல பொருளில் ஒன்று பிரிந்தவழிப் பிரிக்கப்பட்ட பொருளுண்மையுந் தோன்றநிற்பது. வினையெச்சமாவது ஒருவினைச் சொல் எஞ்சிநிற்பது. பெயரெச்சமாவது ஒருபெயர்ச்சொல் எஞ்சி நிற்பது 'அஃதேல் வினையெச்சம் பெயரெச்சம் என்பன வினையியலுள்

ஓதப்பட்டனவலவோ எனின், ஆண்டு ஓதப்பட்டன பெயரையும், வினையையும் ஒட்டிநின்றியலும். ஈண்டையன அன்னவல்லவாமாறு உதாரணத்தால் விளங்கும்). ஒழிபிசையெச்சமாவது சொல்லப்பட்ட பொருளையொழியச் சொல்லாதொழிந்துநிறைபொருளைத் தோன்ற நிற்பது. எதிர்மறையெச்சமாவது ஒருபொருளைக் கூறியவழி, அதனின் மாறுபட்டபொருண்மையும் அதனானே உணர நிற்பது. உம்மையெச்சமாவது உம்மைகொடுக்க வேண்டும்வழி, அஃது எஞ்சிநிற்றல். எனவெனெச்சமாவது எனவென்று சொல்லவேண்டும்வழி அச்சொல் எஞ்சிநிற்பது. சொல்லெச்சமாவது ஒருசொல்லினான் ஒருபொருளை விதந்தோதியவழி, அவ்விதப்பினானே பிறிதுமொருபொருளைக் கொள்ளுமாறு நிற்பது. குறிப்பெச்சமாவது சொற்படுபொருளின்றிச் சொல்லுவான் குறித்தபொருள் எஞ்சிநிற்பது. இசையெச்சமாவது ஒருசொற்றனக்குரியபொருளன்றிப் பிறிதுமொருபொருளை இசைக்குமாறு வருவது.

**பிழைதிருத்தம்:**— இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணப் பதிப்பிலுள்ள 'பெயரெஞ்சுகிளவி யென்றார் இறுதிவிளக்காக' என்பது 'எஞ்சுபொருட்கிளவியென்றார் இறுதிவிளக்காக' என்றிருத்தல் வேண்டும்.

431-வது அவற்றுள்,
சூத்திரம். **பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடியின.**

உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் பிரிநிலையெச்சமென்பது ஏகாரமும் ஓகாரமுமாகிய பிரிநிலையெச்சங்கள் என்று கொண்டு அவனே (தானே) கொண்டான், அவனோ (தானோ) கொண்டான் என்ற உதாரணங்களைக் காட்டினர். ஆனால் உரையாசிரியர் ஏகார ஓகாரங்கள் அவன் என்பதைக் கொண்டுமுடிவதென்றும், சேனாவரையர் 'பிறர்கொண்டிலர்' என்பதைக் கொண்டுமுடிவதென்றும், நச்சினார்க்கினியர் 'கொண்டான்' என்பதைக் கொண்டுமுடிவதென்றும் கூறினர். சேனாவரையர் 'பிரிநிலையொடுமுடிதலாவது அவனே கொண்டான் என்றவழி அவனே யென்பது கொண்டானெனப் பிரிக்கப்பட்ட பொருளை வினையெனக்கொண்டுமுடிதலென்றாரால் உரையாசிரியரெனின்' என்று கூறி, 'அற்றன்று, அவனேகொண்டான் என்புழி அவனென்னும் எழுவாய்வேற்றுமை கொண்டானென்னும் பயனிலை கொண்டது; ஏகாரம் பிரிவுணர்த்திற்று; ஆண்டெச்சமும் எச்சத்தை முடிக்குஞ் சொல்லு மின்மையான், அவர்க்கது கருத்தன்றென்க' என்று உரையாசிரியரை மறுக்கின்றனர். நச்சினார்க்கினியர் 'அவனென்பது கொண்டா

னென்பதனோடு முடிய ஏகார ஓகாரங்கள் பிறர் கொண்டிலர் என்பதனோடு முடிந்தன என்றல் பொருத்தமுடைத்தெனின், வினையெச்சமும் பெயரெச்சமும் ஒழித்து இடைச்சொல்லான்வரும் எச்சங்கள் பொருள்தடுமாறுதல் இடைச்சொல்லோத்தினுட் கூறி ஈண்டு அவற்றிற்கு முடிபு சொற்கூறுகின்றாராதலிற் கொண்டானென்னுஞ்சொல் வந்து அவ்வெச்சங்களை முடித்தாலல்லது பிறர் கொண்டிலர் என்னும் பொருண்மை முடிபு தோன்றாதாதலிற் கொண்டானென்பதே முடிக்குஞ்சொல்லாய் நிற்பப் பிறர் கொண்டிலர் என்னும் பொருண்மை முடியத்தோன்றிற்றென்றலே பொருத்தமுடைத்தென்று கோடும். அன்றியும் மும்மையெச்சத்திற்கு உள்நின்ற பொருண்மைமுடிபு முன்னர்க்கூறி, அதனை நீக்கிச் சொன்மை முடிபு ஈண்டுக்கூறுகின்றதனானும் இஃதே ஆசிரியர்கருத்தென்று உணர்க' என்று கூறி, சேனாவரையரை ஒருவாறு மறுக்கின்றனர்.

ஏகாரமும் ஓகாரமும் பிரிநிலையெச்சங்களென்று கொள்ளின், சூத்திரத்திலுள்ள 'பிரிநிலை முடிபின' என்பதற்குப் பொருள் ஏற்புடையதாகக்கூற இயலவில்லை.

தெய்வச்சிலையார்கூறும் உரை வருமாறு:—'மேற்சொல்லப்பட்டவற்றுள், பிரிநிலையாகியஎச்சம் அதன்கணின்றும் பிரிக்கப்பட்டபொருளொடு தொடர்ந்து முடிவுபெறும் எ-று. உ-ம். இவன் கல்வியுடையன் என்றவழிச் சொல்வான் இவ்வவையத்தாருள் எனக் கருதினானாயின், இவ்வவையத்தாருள் என்பது எஞ்சிநின்ற பிரிநிலையெச்சமாயிற்று. இவட்குக் கண்ணழகிது என்றவழி, மற்றுள்ள உறுப்புக்களின் என்பது எஞ்சிநின்றது. இவை பிரிக்கப்பட்ட பொருளொடுதொடர்புபட்டு முற்றுப்பெற்றவெனக் கொள்க' என்பதே. இது சிறந்து காட்டுகின்றது.

பத்துவகை எச்சத்திற்கும் தெய்வச்சிலையார் கொடுத்துள்ளபொருள் அவிநயஉரைகாரரான இராசபவித்திரப் பல்லவதரையன்மதமென்று நன்னூல் 359 சூத்திரத்தில் மயிலைநாதர் எழுதிய உரையால்தெரிகின்றது.

பாடபேதம்:—இப்போது பதிப்பித்துள்ள இளம்பூரணத்தில்உள்ள பாடத்திற்கும் சேனாவரையர் மறுக்கும் பாடத்திற்கும் மாறுபாடுள்ளது. சேனாவரையர்பாடப்படி 'அவனேயெனப் பிரிக்கப்பட்டானையேகொண்டு முடிதல்' என்பதற்குப் பிரதியாக 'அவனேயெனப் பிரிக்கப்பட்ட சுட்டுப்பெயரின் வினையே கொண்டுமுடிதல்' என்றிருத்தல்வேண்டும்.

[தொடரும்.]

# ஆன்மலிங்கமாலை.

ஆன்மலிங்கமாலை என்னும் சிறுநூல் சைவர்கள் செய்யும் பூஜாக்கிரமத்தின் ஒரு பகுதியைக் கூறுவது. பதினொரு திருவிருத்தங்களையுடையது. திருவாரூரிலே வாழ்ந்த சிதம்பரநாததேசிகரை முன்னிலைப்படுத்தி அவரது மாணாக்கரொருவராற் செய்யப்பட்டது. 'திருமலி யைந்து சுத்தி செய்து' என்பதற் கியைய இதுவும் பூதசுத்தி, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி யென்ற பஞ்சசுத்திகளையும், சிவாலயதரிசனம், சாத்திரவுபாயநிட்டை, சிவனடியார் திருவடிவணக்கம், சீவன்முத்திபனுபோகம், பரமுத்திவிரும்பல் என்றவற்றையும் கூறுவதாகச் செய்யப்பட்டிருக்கின்றது. இச் சிதம்பரநாததேசிகர்,

"சிவபுரந்தத் வப்ரகா சன்றிருவா ரூரிற்
செட்டித்தெரு ஞானப்ர காசன்பின் பவ்வூர்ப்
பவமொழிக்குஞ் சிதம்பரநா தன்ஞான ப்ரகாசன்
பயில்தருமைத் திருஞான சம்பந்த னாகும்"

என்றொரு வமிசாவளியைத் தருமையாதீனத்தார் கூறுவதாலே, சிவபுரம் தத்வப்பிரகாசருக்குப்பின் திருவாரூரிலே செட்டித்தெரு என்று சொல்லப்படும் பொன்பரப்பிய திருவீதியில் வாழ்ந்த ஞானப்பிரகாசரது புத்திரரும், திருமழுவாடி, திருவானைக்கா முதலிய ஸ்தலங்களுக்குப் புராணம் பாடியவரும், திருவாரூர்ப்பள்ளு, சிவபூஜையகவல், அனுஷ்டானவிதி, புட்பவிதி முதலிய சைவசமயத்துக்குரிய நூல்களைப் பாடிய ஞானப்பிரகாசரது தந்தையுமாவர். இவரது ஞாபகார்த்தமாகச் சிதம்பரநாதன் கோல்லை என்ற ஓர் இடம் இப்பொழுதும் திருவாரூரில் கபிலதீர்த்தி யென்னும் ஓடம்போகியாற்றின தென்கரையிலிருக்கின்றது. இந்த இடம் தருமபுர ஆதீனகருத்தர் விசாரணைக்குட்பட்டது. திருவாரூர் ஆலயம் இராஜாங்கக் கட்டளை விசாரணைக்குட்பட்டது. இந்த இடத்தின சரித்திரவுண்மையை அவ்வாதீனத்தாரும் பிறரும் அறிவதற்காக ஈண்டுக் குறித்தனை. திருமழுவாடிப்புராணம்* பாடிய காலம்

---

*திருமழுவாடிப்புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

சகம் ௬௯௪௮௭-க்குக் கி. பி. 1565 ஆகும். இந்நூலும் அக்காலத்ததே யாகும். இதுவரையில் அச்சிடப்படாதது.

இச்சிறுநூலின் பிரதிகள் என்னிடமிருப்பதன்றி, சென்னை அரசாங்கக் கைபெழுத்துப் புத்தகசாலையிலும் இரண்டுள. அந்நூலின் முடிவுரையிலே, 'சிவபெருமானைத் தோத்தரிக்கும் நூல்; சற்றேறக்குறையத் திருவாவடுதுறைமடத்துச் சீடரொருவரால் இயற்றப்பட்டிருக்கலாம்'* என்று ஆங்கிலத்திலும், 'இது சிவஸ்துதி; திருவாவடுதுறைமடத்துச் சிஷ்யவர்க்கத்திலொருவர் செய்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இதிலுள்ள செய்புள் 11; இஃது அச்சிடப்படவில்லை.' என்று தமிழிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

---

## நூல்.

### 1. காப்பு.

அண்ணலே யுனது வெள்ளியங் கிரியு மனந்தனீ ழலும்வட தருவும்
அருளொனு ருருவு மட்டணைப் பதமு மம்புலித் தோலுமுந் நூலும்
வண்ணமார் பவளச் செஞ்சடா டவியு மணிநீல கண்டமுங் கருணை
வதனதா மரையு மருள்பொழி விழியு மந்தகா சமுந்திரு வாயும்
வெண்ணிலா வெறிக்க வணிந்தவெண் ணீறும் விமலமுத் திரையுநீ ளரவு
மேன்மையக் கினியு ஞானபோ தகமும் விளங்கிய கரங்களு மடியேன்
கண்ணுளே வைத்துச் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (க)

### 2 பூதசுத்தி.

சொற்பன மயக்கங் கானனீர்ப் பிராந்தி சுத்தப்பொய் யிந்திர சாலந்
தோற்றமாந் தேகா திப்பிர வஞ்சந் தொந்தமென் றருளினு லறிந்தேன்
தற்பரஞ் சோதி நிட்பிர வஞ்ச தத்துவ தத்து வத்திற்
சத்திய ஞான சுயம்பிர காச சர்வக்ஞ சாரண பிரம
அற்புத வத்து விதசிதா காச வசஞ்சல வகண்டிதா னந்த
அனந்தகல் யாண குணசிவ மென்றுன் னடிமல ரடிமையாய் நினைந்து
கற்பனை திதச் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (உ)

---

* A poem in praise of Siva; probably by a disciple of the Tiruvavadutorai Mutt.

## 3. ஸ்தானசுத்தி.

சென்னமாம் வெப்பந் தணித்திடு மனந்தச் செழுமதி நிலாவெள்ள மென்றுந்
திமிரவா ணவத்தை யொழித்திடு மனந்தந் தினகரர் பேரொளி யென்று
நினைவெழ மாயை வறுமையுற் றோர்க்கு நீள்கற்ப காடவி யென்றும்
நெஞ்சுறு கரும விதையைநீ றுக்கு நிமலகா லாக்கினி யென்றும்
வினைதருந் திரோத மகற்றிடுஞ் சித்தர் விளை பாடு பெருவெளி யென்றும்
விந்துவைத் துறந்தோர் சுகிக்குமா னந்த போதக மென்றுமுண் ணிறைந்த
கனைசிலம்படிக்குட் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௩)

## 4. திரவியசுத்தி.

எங்குமுன் வடிவ மெங்குமுன் செவிக ளெங்குமுன் றிருநய னங்க
ளெங்குமுன் செவ்வா யெங்குமுன் னுசி யெங்குமுன் முடியெங்கு முனது
பங்கயப் பதங்க ளெங்குமுன் கரங்கள் பார்க்கிலுன் னவயவ மெங்கும்
பரவுமுன் கரண மெங்குமென் றுளத்திற் பாவியேன் பவவினை செய்வேன்
பொங்கிய பிரவஞ்ச கங்குலை யொழிக்கும் போதகிற் குணநிரா கார
பூரணா கார சச்சிதா னந்த புராதன சிவபரஞ் சோதி
கங்குலும் பகலும் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௪)

## 5. மந்திரசுத்தி.

அண்டகோ டிகளு மெண்டிசா முகமு மறியுமுக் காலமு மாறு
மூனதத் துவமு மைந்தெனுங் கலையு மத்தமுஞ் சத்தமு மதனுட்
பிண்டமா மனந்த பேதமு முயிரும் பிரமன்மா லாதியோர் பதமும்
பெரும்பிர வஞ்சம் படைத்தளித் தழித்தும் பின்மறைத் தருக்கஞ் செய்யப்
புண்டதம் முருவு மானந்த நடமும் பதிபசு பாசமுங் கண்டு
பாசங்க வகல நம்மைபஞ் செழுத்திற் பார்த்திடு மொன்றுய்ந்த படியே
கண்டுகொண் டுளத்திற் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே, (௫)

## 6. இலிங்கசுத்தி.

பிருதிவி முதலாய் நாதமீ றாகப் பேசும்பிர வஞ்சமா தனமாய்ப்
பீடமேற் சிவப் பிரமமூர்த் தமதாய்ப் பெரும்பரப் பிரமமாய்ச் சிவமாய்

வருதிரு மூலட் டானமூ லமதாய் வளர்க்க மானந்த மாக
மகிழ்பிரத் தியாங்கஞ் சாங்கமொ டுபாங்க மலரொளி குணங்களா ருக
வருபொழி லிச்சை யையவரு மீந்தே யகம்புறத் தொழில்கள்செய் பவரா
யளவிலா வுபக ரணங்களாற் பூசை யசைவிலா வன்பென நினைவேன்
கருணையே வடிவாஞ் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௬)

## 7. சிவாலயதரிசனம்.

சகமெலா முன்பொன் னம்பல மாகத் தமியனே னுளஞ்சிதம் பரமாய்ச்
சச்சிதா னந்த வொளியுரு வாயுன் சமவாய சத்தியுன் மனையா
யிகபர விந்து நாதமே சிவமா யிருவினை யொப்புவந் தொழிய
வினையிலா மாயைத் தமருக மசைத்தே யிருண்மல முயலகன் முறிய
வகமெனுந் திரோதத் திரையினை நீக்கி யானந்த வாழ்வளித் தருளு
மைந்தொழி னடன குஞ்சித பதத்தை யறிவினுங் கனவினு மறவேன்
ககனமா ருதம்போற் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௭)

## 8. சாத்திரவுபாயநிட்டை.

இருவினை மாயை யாணவஞ் சடமா மிவைகளால் யான்பிற னென்னு
மெண்ணிலா வுயிர்க்குச் சுதந்தர மில்லை யிரண்டையுங் கூட்டியே யாட்டுந்
திருவரு ளதற்கு முதன்மைநா மதனுற் செல்காலத் தின்பதுன் பங்க
டிவினை யறங்க ளின்றின்ப துன்பத் தீவினை புண்ணிய மினிமேல்
வருமின்ப துன்பம் புண்ணிய பாவம் வகுப்பெலாஞ் சிவன்செய லென்று
மனோலயம் பிறந்தே நின்செயல் மாண்டு வந்ததை மகிழ்ந்துதா னென்றாய்க்
கருதியே நான்போய்ச் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௮)

## 9. சிவனடியார் திருவடிவணக்கம்.

உன்னடியார்கள் சிவானந்த போக வுலாசத்து மகிமைதா னுலகி
லுலகெலாம் புரக்கு மன்னவர் மகிழ்ச்சி யும்பரிந் திராதியோர் வாழ்வு
கன்னலின் சாறு முக்கனி யமுதங் காமதே னுவின்முலைப் பால்நெய்
கற்பகச் சோலை பைம்பொன்மேல் வீடு காமனூர் மங்கையர் போக
மன்னைதன் றயவு பேயினு வேச மகிலலோ கத்துள சுகங்க
ளாமெனு வுரைப்ப தற்குவா யூறி யாசையைத் தேனருள் பெறவே

கன்னிகாவேதையின்றிச்சிவோகமாயிருக்கக்கடாட்சம்வைத்தருள்சிதம்பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௯)

## 10. சீவன்முத்தியனுபோகம்.

செங்கதி ரவனுங் கண்ணுமன் மதனுஞ் சேயிழை மங்கையர் மதியுந்
திங்களி னொளியுஞ் செங்கதி ரொளியுஞ் சிறந்திரு காட்டமுங் கனலு
மங்கியு மிரும்புங் குளிகையும் பொன்னு மண்டமுஞ் சஞ்சல வளியு
மாவியு மூடலும் லவணமு நீரு மான்மாவு நிறைந்தவா னவமும்
வெங்கனற் சூடு நீருமுப் பளமும் விழுந்திடு திரும்புகா ரிரும்பு
மேவுகாந் தமுமூன் கூடியே யத்து விதமென நிற்பது போலுட்
கங்குல்கா ணாமற் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச்வேசா கைலாய பதியெனுங் குருவே. (௧௦)

## 11. பரமுத்திவிரும்பல்.

மடலவிழ் கமலா லயன்பெரும் பதமும் வளர்ந்தசக் ராயுதன் பதமும்
வானிலிந் திராதி யோர்பெரு வாழ்வு மகிழ்நிதி பதிபெரு வாழ்வுந்
திடமுள வட்ட சித்தியும் விரும்பேன் றிருவடி பெற்றநின் னடியார்
திருவடி பெறவே விரும்புவே னாயேன் றேகமண் மேல்விழு முன்னந்
தடமதிட் காசி கங்கையங் கரைக்கென் றனுவிடும் போதுமை யுடனீ
தாரக வுபதே சஞ்செய்து ஜனன சாகரங் கடந்துநின் கருணைக்
கடலினுண் மூழ்கிச் சிவோகமா யிருக்கக் கடாட்சம்வைத் தருள்சிதம் பரனே
கமலைவாழ் தியாகா காசிவிச் வேசா கைலாய பதியெனுங் குருவே. (௧௧)

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைச்

சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## எம்பெருமானார்வைபவம்.

[௨௭-ம் தொகுதியின் ௪௨௦-ம் பக்கத்தொடர்ச்சி.]

சகலவேதசாத்திரங்கண்முடிந்தநிலத்திற்றனிவைப்பைப்
புகலும்வடுகநம்பிதனைச்சார்ந்தோர்க்கெல்லாம்புரைதீரப்
பகலுமிரவும்பிறந்திறக்கும்பஞ்சபூதச்சடத்தையுயி
ரகலும்பொழுதிற்பேரின்பமங்கைக்கனியாய்ப்பெறவேண்டில். (௧௦௦௦)

ஆசிலாசாரியபதந்தான்றனியேயொன்றுமாங்கதுதான்
தேசுபொலிந்தவெதிராசர்க்கன்றியெவர்க்குஞ்சேராதால்
நேசத்துடனத்திறமறிந்துநின்றுநடந்துகிடந்திருந்து
பேசப்படுநம்முறையெல்லாமிராமாநுசன்பேர்பிதற்றுதிரேல். (௧௦௦௧)

திண்ணம்வீடுதிருவாணைபெறுதலென்னைச்செப்பினன்
விண்ணுமறியவதுநிற்பவிளங்குங்கணியனூர்மன்னுங்
கண்ணற்கினியசிறியாச்சான்கழற்கீழடைந்தபத்தர்கட்கும்
மண்ணிலரியவார்த்தியொடுமிருந்துமாசில்பேரின்பம். (௧௦௦௨)

### வேறு.

அடைவதற்குபாயந்தொண்டரொளிதினிலறையக்கேண்மி
னுடையவர்பாதப்போதையுன்னிடில்வீடுதிண்ண
மிடையிலோர்களைகணில்லையெமக்கெனத்திருமால்தன்னைத்
தடையறவாணையிட்டுக்கொடுத்தனன்றருமம்போல்வான். (௧௦௦௩)

### வேறு.

என்னையாளருளாளப்பெருமாளெம்பெருமானார்
தன்னையேகளைகண்ணாய்ச்சார்ந்தவநந்தாழ்வானுக்
கன்னையினுமன்புடையவாச்சானுக்காகிலை
மின்னினிலையெனக்காணுமெய்ஞ்ஞானநிலைநின்ற. (௧௦௦௪)

தொண்டனூர்நம்பிக்குத்துகளறுசீர்மருதூருட்
கொண்டுவளர்நம்பிக்குக்கூறவான்பலகலையும்
பண்டுபயின்றேகதண்டியாய்ச்சிலநாட்பாவித்தே
னண்டர்தொழுமெதிராசன்கழலடைந்தேனதற்பின்னும், (௧௦௦௫)

### வேறு.

ஆங்கவனெனக்குநல்கவனந்தநூலாய்ந்துமாய்ந்தே
னோங்குயர்வீடுசேர்தற்குபாயநம்மெதிகணாதன்
பூங்கழல்களைகணாகப்புந்தியினினைதல்போலப்
பாங்கொடோருபாயங்காணேன்பங்கயக்கண்ணனாணை. (௪0௬)

ஒப்பறுமெதிராசற்குச்சரணமென்றுரைக்கில்வீடங்
கப்பொழுதவர்கட்கங்கைக்கனியெனவறியலாகு
மெப்படியெனினும்யாருமெறிந்தகற்புவியிற்சேர்தல்
தப்பிடாவாறுபோலாமவனல்லாச்சாதனத்தால். (௪00௭)

உயிர்பாகதியைச்சேரவுன்னுதலுணர்வானோக்கி
மயிரிலக்காதறிண்ணம்மலரயனெனினுமென்னத்
தயிரொடுநெய்பாலுண்டதலைவனையாணையிட்டுச்
செயிரறவுரைத்தான்யார்க்குஞ்செய்தவம்போன்றதேவன்.

### வேறு.

ஆங்கதற்குப்பின்னொருநாட்பிள்ளைப்பிள்ளையாழ்வானைப்
பாங்குடனேயாசரித்தோரயனத்தப்பத்தனொடு
மோங்கியவென்மனவாக்குக்காயமுடனுத்தமனே
வாங்குகுருதெக்கணையாயீகின்றேனெனவழுத்தி. (௪00௯)

### வேறு.

வணங்கியுரைப்பவருளாளன்மனத்திலெண்ணியவனோடு
நுணங்குகேள்வியுடையவனேநுணிதாம்வலிதாமனவாக்கும்
பிணங்குமூடம்பும்வெவ்வேறாய்ப்பேசப்படுமப்பேதமையை
யிணங்கியொன்றாய்நின்றதுணக்கிவேன்பெறுதியெனவிசைத்தாய். (௪0௧0)

மண்ணிற்காயமெதிரிமறமன்னர்கொடுமைதனைநாளு
மெண்ணியடங்கும்வாக்குமதற்கிசைந்தவசனங்கட்டுரைக்கும்
பண்ணிற்சிறந்தமறைவல்லாய்பாழ்த்தமனத்தின்பாங்கறிந்தா
னண்ணிப்பொருந்தத்தரியாமிக்கல்லாலெவர்க்குநாடரிதால். (௪0௧௧)

### வேறு.

ஆதலாலீபவர்க்குமேற்பவர்க்குமச்சமறுங்
காதலான்மனத்திடைநம்மெதிராசன்கழற்கமலம்
போதெலாமுறவிருத்திவாக்கிலவன்புகழ்கூறித்
தீதிலாவவனடியாரேவலுடன்செயப்பெற்றால். (௪0௧௨)

## வேறு.

அதுவேநமக்குத்தெக்கணைநீயளிக்குந்திறந்தானெனவறைந்தான்
முதுவேதத்தின்முடிவுணர்ந்தமுதல்வனுங்கத்திறங்கிடப்ப
வெதுவேவரினுந்திருவுளத்திலிறையுங்கலங்காதவ்வுயிர்க்குப்
பொதுவாய்நின்றபுகழ்க்கூரத்தாழ்வானென்னும்பொருவில்லான். (௧0௧௩)

## வேறு.

பேதமறவுவந்தாண்டபிள்ளைப்பிள்ளையாழ்வானே
டோதுவான்மனவாக்குக்கன்மமெனவுளமூன்றி
லேதமறுமொன்றினாலேழுலகுமுன்னுடைய
பாதமலர்தொழவாழும்பதம்வேண்டிற்படியுள்ளார். (௧0௧௪)

## வேறு.

இன்னாச்சொல்லாம்பெரும்பயிரிலிறங்கிமேயுங்கோக்களென
வுன்னாநின்றவைம்புலனையொருங்கக்கட்டியுரனடக்கி
யென்னாருமுதாமெதிராசன்றிருப்பேர்வாக்கிலிசைத்திருக்கின்
மன்னாநின்றமூவுலகும்வசமாமென்றான்மதிமிக்கான். (௧0௧௫)

## வேறு.

பொருவறுமுதலியாண்டான்முன்புநற்புலவர்காண
வொருபகன்மிளகாழ்வான்வந்தொப்பிலாயின்றென்னோடே
வருகநீதர்க்கம்பண்ணவென்றனன்மாசிலாண்டான்
இருவரிலொருவர்தோற்றாலேதுகொல்சபதமென்றான். (௧0௧௬)

என்றவருரைப்பவாழ்வான்யானுனக்கின்றுதோற்றேன்
மன்றல்சேர்மார்பநின்சீர்மனையளவுனைத்தோட்கொண்டு
சென்றுவிட்டகல்வனென்றான்சீரியவாண்டானோக்கி
நன்றதுசெய்வோமென்னநானிலத்தெவருங்காண. (௧0௧௭)

ஆங்கவனோடுதர்க்கஞ்செய்தவன்றன்னைவென்றா
னோங்குசீர்முதலியாண்டான்றன்னைபும்பர்களுங்காணத்
தாங்கினான்சீபாதம்மித்தரையிசைமிளகாழ்வான்பின்
பூங்கழலிறைஞ்சியந்தப்புனிதனைநோக்கியெந்தாய். (௧0௧௮)

இன்றுநானுய்யும்வண்ணமிரங்கிநீயருள்கவென்ன
மன்றல்சேர்திருத்தாடன்னில்வணங்கிடமாசிலாண்டா
னென்றியகருணைமிக்கவுடையவர்தம்மைக்காட்டி
நன்றிசேர்மனத்தாயிந்தநற்றவன்றிருப்பேர்சொல்லி. (௧0௧௯)

வேறு.

சீர்பெற்றருளில்வாழுதியென்றுரைத்தானந்தத்திறங்கிடப்ப
வேரொத்திலங்குஞ்சீபட்டர்வதனநோக்கியெம்பார்சீர்
கூரத்தாழ்வான்மகன்பின்புகுமாரரங்கர்தமக்கென்றும்
தேரப்பட்டமறையனைத்துங்கற்றேமென்றுஞ்சிந்தனையில். (௧௦௨௦)

இறுமாவாதேயெதிராசன்சரணஞ்சரணமெனுமுரையை
யுறுமாப்பொருளாய்நினைத்திருவென்றுரைத்தாரந்தநெறிகிடப்பச்
சிறுமாமேனிநஞ்சீயர்முகத்தைநோக்கிச்சீபட்டர்
பெறுமாறுமக்கொன்றுரைப்பலதைப்பிடித்திரொன்றுபேசுவான். (௧௦௨௧)

வேதாந்திகளென்றுலகனைத்தும்விரிந்தபுகழால்யாவர்களு
மோதாநின்றதெம்பெயர்மற்றொருவர்க்குளதோசீபட்டர்
பாதாம்புயத்திலாசரித்தோம்பகரவரியபெருந்தனங்கள்
நாதாகொள்கவெனக்கொடுத்தோமென்னநினையுநவைநினைவை. (௧௦௨௨)

வேரோடறுத்துப்பேரின்பம்மேவவேண்டிலெதிராசன்
சீரார்திருத்தாள்சரணமெனச்சிந்தித்திருத்திரெனவிசைத்தான்
ஞானவன்பனஞ்சீயரருள்சேர்மெய்ம்மைநம்பிளைதன்
னேரார்முகம்பார்த்தங்கொருநாளிசைக்கும்வகுளத்திருத்தாரான். (௧௦௨௩)

திருவாய் மொழிக்குமகிழ்மாறன்றிறத்தைநினைவையறிந்தீடிங்
கொருவாய்படநாங்கட்டுரைத்தோமுலகுக்கெல்லாமெய்ஞ்ஞானக்
குருவாயிருந்துவாழ்கின்றேங்குருவேதமக்கிங்கெனுநிலையில்
மருவாதிருந்துபாகதிக்குமாசிலாதவெதிராசன். (௧௦௨௪)

பாதாம்புயமேதஞ்சமெனப்பகலுமிரவுநினைந்தெவரு
மோதாநின்றாதுநிற்பவுலகமூன்றுக்கொருவைப்பாம்
வேதாந்தத்தில்நிலைநின்றமெய்ஞ்ஞானத்தின்னம்பிள்ளை
போதாநந்தக்கழலடைந்தோனொருவன்பொருவின்மெய்ஞ்ஞானி. (௧௦௨௫)

வேறு.

நிவக்கறைப்பிள்ளைசெய்யதிருக்கையைப்பிடித்தங்கோர்நா
ளவத்தொழிலகற்றிநாளுநம்பிள்ளையகத்திற்சென்றார்
பவக்கடல்கடந்தானேகுமிடைகழியதனிற்பாங்காய்த்
தவத்திறமறியான்மேலோர்சரணசம்பந்தமுள்ளான். (௧௦௨௬)

வேறு.

இடந்தாவொருவன்பாகவதன்வழியைமறித்துக்கிடப்பளவில்
நடந்தாங்கணைந்தநம்பிள்ளைஞானமிக்கான்றிருத்தாளைக்

கடந்தாற்பழுதென்றவணிற்பக்காலமடக்காயெனவுரைத்தான்
றொடர்ந்தாங்கவர்க்குக்கைகொடுத்துச்சென்றதுகளில்சிவக்கறையான். ()

வேறு.

என்றுரைத்திட்டபோதினப்பிள்ளையிதயநொந்தாங்
கன்றவர்கையைவிட்டென்னறைந்தனையாழ்வார்கட்கு
நன்றிசேர்மாயன்மங்காமதிநலம்நல்கப்பெற்று
றொன்றுபட்டங்களெல்லாமோங்குமால்தொண்டர்தாளை. (௧0௨௮)

வேறு.

திருத்தாளென்றுகட்டுரைத்தார்சிறியோரல்லரெனவதையுன்
கருத்தாற்பேணமாட்டாதநீயோகாலமடக்கென்பாய்
வருத்தாதிவணின்றென்னையினேயேகாயென்னமனநொந்தக்
குருத்தார்க்கழியப்படுமோறற்கல்லாலென்னக்குழைந்திரங்கி. (௧0௨௯)

வேறு.

செப்பினார்பிள்ளையன்றேசிவக்கறைப்பிள்ளைநீங்கி
வெப்பமுற்றுவிவாடிச்சிவக்கறைதன்னைமேவி
யெப்படியுய்வதென்னவிருந்தலமந்துழைந்து
தப்பறவொருநாளந்தத்தேசிகன்றன்பாலோரான். (௧0௩0)

விடுத்தனனடியேன்செய்யவேண்டுவதென்னென்பான்முன்
னடுத்துளவபசாரத்துக்கெனவதைப்பிள்ளைகேட்டுக்
கடுத்தசொல்வழியால்வந்தகடுநரகுடனேதீரு
மெடுத்துநின்வாக்காலெந்தையெதிபதிதிருப்பேர்சொல்லில் (௧0௩௧)

தப்பாதுனக்குப்பரகதியுந்தருநஞ்சீயராணையென
வப்போதுரைத்துப்புகவிடுத்தானதற்பின்குருகைப்பிரான்பிள்ளான்
செப்பாநின்றசிறுவேற்றூர்தன்னைமன்னிச்செறிந்திநா
ளொப்பாரில்லாச்சோமாசியாண்டானவன்பாலோங்கியசீர். (௧0௩௨)

வேறு.

பாடியந்தன்னைமூன்றுருவாசித்திட்டனன்படியுளோர்புகழ
மாட்சிமையுடைச்சோமாசியாண்டானம்மதிமிக்கான்றனைப்பின்னைநோக்கிச்
சூழ்ச்சிமெய்ஞ்ஞானச்சகலநூல்களுக்குஞ்சுடரெனத்துலங்குபாஷியத்தை
யாழ்ச்சியாயிங்கேமூன்றுருக்கற்றோமாரெமைநிகர்ப்பவருலகில். (௧0௩௩)

என்றிருமாவாதிருந்துநீதிருந்தவெதிகளுபகன்றிருநாம
மொன்றுமேவாக்கிற்படித்திவ்வுலகிலுள்ளநாளளவுமுன்னுடலம்
பொன்றினலதுவேகொண்டுபோய்வைக்கும்பொருவநம்வீட்டிலென்றிசைத்தா
னன்றதுகேட்டப்பயாவரும்புகழுமாரிலாஞானமேயுடையான். (௧0௩௪)

## வேறு.

வாக்குத்தூயோன்கோமடத்துப்பிள்ளான்றருளின்மதிமிக்க
காக்கைபாடியாச்சான்ஸ்ரீபாடியத்தைக்களிப்போடு
நாக்குக்கிரதம்பெறமுக்காணுட்டாரறியவாசித்துத்
தாக்குமிறுமாப்பொடுங்கூடித்தன்னைவியந்துதிரிவதனை. (௧௦௩௫)

கண்டானவனைக்கோமடத்துப்பிள்ளானோக்கிக்கற்றமையா
லுண்டாய்த்துனக்கிங்கிறுமாப்பிவ்வுலகமறியவப்பழியைப்
பண்டான்வல்லாய்தீர்த்தாவிபரமபதத்தைச்சேர்வதற்குக்
கொண்டாங்கிருக்குமோருண்மைகுறிக்கொளென்னக்கூறுவான். (௧௦௩௬)

சருவவேதமுடிந்தகிலஞ்சாற்றுமெதிராசன்சரணம்
பெறுவதெவர்க்குந்தனிவைப்பாம்பேதைநீங்கியுனக்குமதை
யுறுவதாகப்பிடித்தியெனவுரைத்தானெதிகட்கதிபதியோர்
மறுவற்றுலகில்நின்றதையென்வாக்காலுரைக்கவல்லேனே. (௧௦௩௭)

மாசிலெங்களாழ்வானுமதிமிக்கோனங்கொருதினத்தி
லாசில்காக்கைபாடியெனுமாச்சான்பிள்ளைமுகநோக்கி
நேசமிக்காயரங்கத்தினெடுமாலுன்னைமுனிந்திடுநாட்
டேசுற்றிறையுங்கலங்காதேயிருந்ததெதனாற்செப்பென்றான். (௧௦௩௮)

ஆனாற்கேளுமரங்கரெனுஞ்சண்டவாயுவடியேனைத்
தானாய்த்தோன்றியெடுத்தெறியத்தமியனெதிகணாதனெனும்
வானார்மேருப்புறத்தொதுங்கிவாழ்ந்தபின்னம்மாருதமாந்
தேனார்துளபத்திருத்தாரான்சிறியேன்றனக்காருயிரானான். (௧௦௩௯)

என்னவுரைத்தானடாதூரிலிலங்குமம்மாடாளிணையின்
மன்னிச்ஸ்ரீபாடியந்தன்னைவாசித்தார்கள்பன்னிருவர்
உன்னவரியவதினர்த்தமுரைக்குமம்மான்குருபாயம்
பண்ணும்பத்தியாயிருக்குமதனாற்பகரும்பிரபத்தி. (௧௦௪௦)

தன்னையுபாயமெனநினைந்திவ்விருமினென்னச்சாற்றினன்
முன்னைத்தவத்தாலுயர்ந்தவர்கண்மொழிவாருரைத்தபத்தியினு
மன்னையனையாய்ப்பிரபத்தியரிதாமென்றாதுகேட்டிங்
கென்னையாண்டடாதூரிலம்மாளிசைக்குமாயிவிதை. (௧௦௪௧)

அருளிச்செய்தவெதிராசனருட்டாமரைத்தாளிணைதன்னைத்
தெருளித்பொலிந்தநம்வாக்காற்றஞ்சமாகச்செப்பியிருந்
திருளிற்செறிந்ததீவினையையிரிவித்துய்ம்மினெனமறையின்
பொருளிற்பொருளைக்கட்டுரைத்தான்புவனமேழும்விரிபுகழான். (௧௦௪௨)

## வேறு.

சீராருந்திருநாராயணபுரத்திற்சிறப்பினோடு
மோராருநடுவிலாழ்வான்புகுந்திங்கின்பமொடு
மாராதபெருங்காதற்றொண்டர்கட்கப்பாடியத்தை
நேராகக்கட்டுரைத்துவருங்காலந்தனிலிலைசேர். (௧௱௪௩)

## வேறு.

வங்கிப்புரத்தில்வருமாச்சிசொட்டைக்குலத்தில்வருமம்மான்
அங்கத்திறத்தருள்ளிட்டாரந்தநூலைக்கேட்டஞ்சி
யெங்கட்குணரவரிதென்னவிசைத்தாராகிலிதையிசைத்த
செங்கட்கருணைமதிமுகத்தெம்மெதிசனுதன்றிருவடிகள். (௧௱௪௪)
தஞ்சமென்னநினைந்திருமினென்றாங்கவர்க்குச்சாற்றினான்
வெஞ்சொற்கடிந்தமெய்ஞ்ஞானிவேதவியாதபட்டர்திருக்
கஞ்சத்திருநாரணபுரத்துக்கருணைமிக்கவுடையவர்முன்
னெஞ்சுட்பொதிசீபாடியத்தைநெகிழ்ந்தவன்போடாதொருநாள். (௧௱௪௫)
உரைத்தாரந்தத்தலத்திலிருந்தோங்குமைம்பத்திருவர்களு
நிரைத்தார்பட்டரெதிர்மினறுநீரிங்கெங்கட்கருளியசொற்
றிரைத்தார்கலிசேர்பகிரதிபோற்றிகழுமுகமாயிரமாயுள்
களைத்தாலெங்கட்கப்பொருளைக்கருதற்குறுமோகழறென்றார். (௧௱௪௬)
ஆனானீங்களிவையுரைத்தவாசிலாதவெதிராசன்
தேனார்கமலத்திருத்தாளைத்திருப்பேருடனேசிந்தித்திங்
கூனாருடலச்செடிநீக்கியும்பருலகின்மேலாய
வானார்வீட்டிற்புகுமளவுமிருமினென்னவகுத்துரைத்தான். (௧௱௪௭)
நடுவிற்றிருவீதிப்பிள்ளைவள்ளைக்குளத்தினலமிக்க
மடுவிற்றுயர்முன்கைக்கரிக்குத்தீர்ப்பான்சென்றமான்முன்பிற்
படிநற்பொருட்சீபாடியத்தைக்கோட்டிபண்ணவவர்பத்தன்
வடுவற்றுலகிற்படர்நீதிவளையமழகியானென்போன். (௧௱௪௮)
வஞ்சனேனுக்கிதன்பொருளைமனத்திற்றரிக்கக்கூடாது
தஞ்சமாகவடியேனுக்கொன்றாய்ச்சாற்றவேண்டுமெனக்
கஞ்சத்திருத்தாளிணைபிடித்தான்காதன்மிக்கபிள்ளையுநீ
அஞ்சவேண்டாமெதிராசனருட்டாமரைத்தாளிணைதன்னை. (௧௱௪௯)
அல்லும்பகலுநினைந்திருந்தாலதுவேவீடுதரும்புலனைக்
கொல்லும்படையுமவன்பெயராமதனாவிதனைக்குறிக்கொளெனக்
கல்லுமுருகக்கட்டுரைத்தான்கருணைமிக்கவெதிராமஞ்
சொல்லுமவர்க்குமேலொன்றுசொல்லுமவர்க்கென்சொல்கேனே. (௧௱௫௰)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.